# எழுத்து

ஆகஸ்ட்

64

ஆறாம் ஆண்டு

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

பல்கலைக் கழக நாவல் சொற்பொழிவு 122
தலையங்கம்

மணிபல்லவம் உத்தேசமும்—
நிறைவேற்றமும் 123
ஏ. இப்ரஹீம்

இலக்கிய பாட்டைகள் 125
மணிக்கொடி கு. சீனிவாசன்

கணபதி துணை 128
ந. பிச்சமூர்த்தி

வழியும் விளக்கும் 130
எஸ். வைத்தீஸ்வரன்

கை சிவந்தது 130

திறந்த ஜன்னல் 131
வணு. கணு.

ரஸிகனும் சமூக மனப்பான்மையும் 133
தர்மு சிவராமு

நிலவு 135
சி. மணி

50
பைசா

68

64-ம் ஆண்ட்
ஏடு 68
ஆகஸ்டு
1964

# எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

'எழுத்து' ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியன்று வெளிவரும் மாத ஏடு. தனிப் பிரதி காசு 50. ஒரு ஆண்டு சந்தா ரூ. 5-00 வெளிநாடுகளுக்கு ரூ. 6-00. சந்தா, கட்டுரை சம்பந்தமான கடிதங்கள் எல்லாம் 'எழுத்து' (Ezhutthu) 19-A, பிள்ளையார் கோயில்தெரு, திருவல்லிக்கேணி, என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

---

தலையங்கம்

## பல்கலைக் கழக நாவல் சொற்பொழிவு

சென்னை பல்கலை கழகத்தின், தமிழ் இலக்கிய சம்பந்தமான சொற்பொழிவுகள் பொதுவாகபழய இலக்கியங்களைப்பற்றியதாகவே இருப்பது தான் வழக்கம். சென்ற ஆண்டு முதல் அதில்கூட ஒரு புது திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது தற்கால இலக்கியம் பற்றிய பேச்சுக்கள் கூட சர்வகலாசாலை கட்டிடத்துக்குள் ஒலிக்க ஆரம்பித்துவிட்டன. ஆச்சர்யப்பட எதுவும் இல்லை. ஏனென்றால் அவர்களாக இந்த திருப்பத்தை செய்துவிடவில்லை. 'கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சொற்பொழிவு' என்ற ஒரு திட்டத்தின்படி ஆண்டுதோறும் மூன்று சொற்பொழிவுகள் சர்வகலாசாலை ஆதரவில் நடக்க ஒரு ஏற்பாடு செய்தவர்கள் செய்த ஒரு விதி சர்வகலாசாலை கைகளை கட்டிவிட்டது. இந்த சொற்பொழிவுகள் தற்கால இலக்கியம் பற்றியதாகவே இருக்கவேண்டும் என்ற நிபந்தனைதான் அந்த கட்டுப்பாடு. இந்த விதமான ஒரு நிபந்தனை விதித்து 'தற்கால இலக்கியம்' பற்றிய சொற்பொழிவுகள் சர்வகலாசாலை ஆதரவில் நடக்க வகை செய்துள்ள 'கல்கி நினைவுச் சொற்பொழிவு' அமைப்பாளர்கள் பாராட்டப்பல வேண்டியவர்கள்.

சென்ற ஆண்டு பேராசிரியர் அ. சீனிவாசராகவன் கவிதைபற்றி கட்டுரை வாசித்தார். இந்த ஆண்டு 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் 'தமிழ் நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும்' என்பது பற்றி மூன்று நாட்கள் கட்டுரை வாசித்தார். தமிழ் நாவலுக்கு தொண்ணூறு வருஷ சரித்திரம் தான் இருக்கிறது. அதிலும் சென்ற கால் நூற்றாண்டாகத்தான் அதுக்கு ஒரு வளம் ஏறிக்கொண்டிருக்கிறது. இலக்கியத் தரமான நாவல் என்று 1940க்கு முன் விரல்விட்டு எண்ணக்கூடியது ஒரு அரை டஜன் கூட கிடையாது. கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி, முருகன் ஒரு உழவன், கந்தன் ஒரு தேசபக்தன்—இதுக்குமேல் அன்று, நாற்பதுக்கு முன்—சொல்லக்கூடிய நாவல் கிடையாது. ஆகவே நாவலின் தோற்றம் என்கிறபோது சென்ற நூற்றாண்டு கடைசி முப்பது ஆண்டுக் காலத்து சுயபடைப்புகளான பிரதாபமுதலியார்-கமலாம்பாள்—பத்மாவதி, பற்றி (தமிழ் நாவலின் தோற்றம் பற்றி) பேசி விட்டு, ஒரு நீண்ட இடை வெளியை (தழுவல் காளான் காலத்தை மறந்துவிட்டு) தாண்டி, சென்ற இருபத்தைந்து ஆண்டு காலத்திய,பங்கிம் சந்திரர், சரத்சந்திரர், தாகூர் ஆகியோரது மொழி பெயர்ப்புகளுடன் ஆரம்பித்து சுயமான நாவல்கள் பிறக்க முற்பட்ட நாற்பதுக்கள் காலத்துக்கு வந்துவிட்டு, பிறகு இன்று வரைபற்றி பேசுகிறபோது தான் தமிழ் நாவல்களின் 'வளர்ச்சி' என்பது பற்றிய சொற்பொழிவு நிரப்பம் பெறுகிறது.

இதுதான் தமிழ் நாவல் பற்றிய 'தோற்றமும் வளர்ச்சியும்' என்ற சொற்பொழிவின் உள்ளடக்கமாக இருக்கவேண்டும். இருந்திருக்கவேண்டும். ஆனால் கி. வா. ஜகந்நாதன் சொற்பொழிவுத் தொடரின் உள்ளடக்கம் என்ன இருந்தது? கதை சொல்வது பற்றிய தொல்காப்பிய கால ஆதாரத்துடன் ஆரம்பித்து, பாட்டி கதை சொல்லும் வழக்கம் குறிப்பிட்டு, 'பிரதாப முதலியார்' நாவலுக்கு வந்து தோற்றம் சொல்லி, தழுவல் காலத்து வடுவூரார், ரங்கராஜு, ஆரணி, கோதைநாயகி அம்மாள் ஆகியோர் பிரஸ்தாபம், வங்க, இந்தி மொழி பெயர்ப்புக்கள் பற்றி குறிப்பு, பிறகு கல்கி பற்றி சொல்லியதோடு முதல்நாள் 'தோற்றுவாய்' முடிந்தது. இந்த சொற்பொழிவு ஓரளவுக்கு சரியாக அமைந்திருந்தது, (கா. சி. வெங்கடரமணி பெயரை குறிப்பிடத் தவறியது தவிர). இரண்டாவது சொற்பொழிவு 'பிரதாப முதலியார்' கதைச்சுருக்கம், முக்கியமான கதாபாத்திரங்களைப் பற்றி குணசித்திரம், ஆசிரியரின் சில கருத்துக்கள் சில குறிப்புகள் பற்றியும், அதேபோல கமலாம்பாள், பத்மாவதி பற்றியும் தனி நூல்களைப் பற்றி மேற்கோள்களுடன் ஆராயப்பட்டதோடு முடிந்துவிட்டது. மூன்றும் நாள் கல்கியின் 'சிவகாமியின் சபதம்' 'அலை ஓசை' இரண்டும் (முதலாவது நாற்பது நிமிஷம்; பின்னது 25 நிமிஷம்) எடுத்துக் கொள்ளப்பட்டு, கதைச் சுருக்கம், கதாபாத்திர குணசித்திரம் கல்கியின் வர்ணனைத்திறனுக்கு உதாரணங்கள், அவரது திறமை இத்யாதிகளைப் பற்றி குறிப்பிட்டதோடு சொற்பொழிவே முடிந்துவிட்டது.

இதுதான் 'தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' பற்றிய சொற்பொழிவுத்தொடர்! முதல் மூன்று நாவல்கள் தோற்றம்; பின் இரண்டு நாவல்கள் வளர்ச்சி. கி. வா, ஜ. வின் கருத்தில் தோற்றமும் வளர்ச்சியும் இதுதான். இவ்வளவு தான். தமிழ் நாவலின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் இந்த ஆதாரம், மதிப்பீடு போதும் என்று முடிவு கட்டிவிட்டார் போலிருக்கிறது. அவருக்கு கொடுக்கப்பட்ட தலைப்புக்குள் அடங்கவேண்டிய விஷயத்தை பெறத் தவறிய அவரது சொற்

பொழிவுத் தொடருக்கு 'ஐந்து நாவல்கள்' என்ற தலைப்புதான் பொருந்தும். ஆயிரத்துக்கு மேற்பட்ட நாவல்கள் தமிழில் இருப்பதாக கணக்கு போடப்பட்டிருக்கிறது. 'அவைகளைப் பற்றியும் பொதுவான மதிப்பீடுதான் வளர்ச்சி சம்பந்தமாக முடிவு தெரிவிக்கும். இந்த ஐந்து நாவல்களைப் பற்றிய தகவலைக்கொண்டு சொற்பொழிவை கேட்ட இலக்கிய மாணவன் ஒருவன் தமிழ் நாவலைப்பற்றி என்ன தெரிந்து கொண்டிருக்க முடியும்? மறைந்துபோன இந்த நான்கு நாவலாசிரியர்களுக்குப் பின், சொல்ல யாரும் இல்லையா என்று கேட்கத்தானே தோன்றும்.

இன்னொரு விஷயம். சர்வகலாசாலை கட்டிடத்துக்குள் உயிர்ப்பொருள்கள் போகமுடியாதா? மறைந்தவர்களைப் பற்றித்தான் பேசலாமா? ஜகந்நாதன் குறிப்பிட்ட நால்வரும் மறைந்தவர்கள். (அதிலும் கா. சி. வெங்கடரமணி இல்லை) இருக்கும் படைப்பாளிகளின் நாவல்களைப்பற்றி பேசாத காரணம்? இதுக்கு கி.வா.ஜ. சொன்ன ஒரு கருத்தைக் கொண்டு முடிவுக்கு வரலாமா? கி. வா. ஜ. தொடரை முடிக்கும்போது சொன்னார்: நான் சிலரைப்பற்றி மட்டும் சொன்னேன். மற்றவர்களைப் பற்றி சொல்வதில் **சங்கடம்** இருக்கிறது. நான் ஏன் சொல்லவில்லை என்று கேட்பவர்கள் நீங்களே செய்து பாருங்கள். அந்த சங்கடம் உங்களுக்குத் தெரியும். நான் எதைச் சொன்னேன் என்பதை விட சொன்னதைச் சரியாகச் சொன்னேனா என்று பாருங்கள்' என்று முடித்தார்.

இந்த வார்த்தைகளை நாம் கி.வா. ஜகந்நாதனிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. 'சங்கடம்' என்று அவருக்கு பட்டிருந்தால் இந்த சொற்பொழிவை தவிர்த்திருக்கவேண்டும். விமர்சனத்துறைக்கும் சங்கடத்துக்கும் சம்பந்தமே கிடையாது. 'சங்கடமான சமையலைவிட்டு சங்கீதம் பாடப்போறேன்' என்ற பழய பாட்டு தான் நமக்கு ஞாபகம் வருகிறது.

'நீங்கள் செய்து பாருங்கள், சங்கடம் தெரியும்' என்கிற சவாலும் முறையானதல்ல. தலைமுறை தலைமுறையாக இலக்கியரசிகர்கள் செய்து வருகிற ஒரு காரியம் இந்த சங்கடத்துக்கு அப்பாற்பட்டது. அவர்கள் முன் படைப்பு பொருளே அன்றி படைப்பாளி இல்லை படைப்பை வைத்தே படைப்பாளி. ஆகவே எழுதின ஆசிரியரை மனதில் வைத்துக்கொண்டு சங்கடப்படுகிற வாசகன் ரசிகன் இல்லை. எழுதப்பட்ட நூலைவைத்துக் கொண்டு 'சங்கட'ப்படுகிறவன் தான் ஒரு ரசிகன், விமர்சகன்.

சொன்னது சரியாகச் சொல்லப்பட்டதா என்று பார்ப்பது அவசியம் தான். ஆனால் எதைச் சொல்ல உத்தேசிக்கப்பட்டதோ அது சொல்லப்பட்டதா என்று பார்ப்பதுதான் முதல் முக்கியம். கி. வா. ஜ பிந்தியதை செய்ய முயற்சிக்கவே இல்லை. ஆகவே தனக்கு கொடுக்கப்பட்ட தலைப்புக்கு நியாயம் செய்யத் தவறிவிட்டார் கி.வா.ஜ.

தலைமைவகித்த பேராசியர் மு. வரதராசனார் கூறியது போல, காட்சிப் பொருள் (Museum) உயிர் பொருள் (Zoo) இரண்டு சர்வகலாசாலையில் இடம் பெறவேண்டும். இன்று இருப்பவர்களும் அங்கு விசாரணைக்கு, மதிப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். ஆனால் அவர் ஆசீர்வதித்தது போல் இன்றைய எழுத்தாளர்கள் இன்னும் 60, 70, 80 வயது வாழ்ந்து உயிர்ப்பொருளாக இருந்து, அங்கு ஆராயப்படும் நாளை எதிர்பார்த்து இருக்கவேண்டும் என்பது நல்ல விருப்பம் ஆனாலும், நடைமுறை சாத்யம் இல்லையே! அந்த நாட்களுக்குள் அவர்களும் காட்சிப் பொருளாக ஆகி விட்டிருக்கலாம். ஆகவே சர்வகலாசாலை தற்கால இலக்கிய சொற்பொழிவுகள் உடன் நிகழ் காலத்து இலக்கிய நடப்பு பற்றியதாகவும் இருக்கப் பார்த்துக் கொள்ளப்படவேண்டும். அதோடு அந்தத் துறையில் போதிய ஆழ்ந்த, விரிந்த கவனம் செலுத்தியவர்களைக் கொண்டு உத்தேச விஷயத்துக்கு பொருந்த தங்கள் சொற்பொழிவை ஆற்றக்கூடியவர்களை தேர்த்தெடுக்கவேண்டும். இன்றய இலக்கியமாணவனுக்கு அதுதான் பயன்படும். தேவையுமாகும்.

---

## வருந்துகிறோம்

சென்ற ஏட்டின் நமது தலையங்கத்தை மறு பிரசுரம் செய்து 'இலக்கியவட்டம்' பின்வரும் குறிப்பை எழுதி இருக்கிறது:

'எழுத்து'வின் (66-67, இரட்டை இதழ், ஜூன் ஜூலை 64 ஆறும் ஆண்டு 16 பக்கங்கள்' 50 காசு) ஆசிரியர் 'பொறுப்புணர்ச்சி காட்டாத கருத்துக்கள்' என்று இலக்கியவட்டத்தையும் அதன் ஆசிரியரையும் பற்றித் தலையங்கம் தீட்டியிருக்கிறார். அத்தலையங்கம் இங்கு அவர் அனுமதியுடன் எடுத்துத் தரப்படுகிறது. இலக்கிய வட்டமும் க. நா. சு. வும் எப்படி இலக்கிய சேவையும் இலக்கிய விமர்சன சேவையும் செய்ய வேண்டும் என்று உபதேசம் செய்திருக்கிறார் செல்லப்பா இந்தத் தருமோபதேசத்திற்கு எமது நன்றி.'

இது தான் 'எழுத்து' க்கு இலக்கியவட்டம் பதில்! நாம் எதிர்பார்த்தது வேறு. இலக்கியவட்டம் பற்றியும் அதன் ஆசிரியர் பற்றியும் பொருட்படுத்தி மூன்று பக்கங்கள் எழுதி வாசகர்களின் நேரத்தை வீணாக்கிய தவறை ஒப்புக் கொண்டு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

# மணிபல்லவம்—உத்தேசமும் நிறைவேற்றமும்

## ஏ. இப்ராஹீம்

தமிழில் நாவல்கள் பற்றி விமர்சனம் ஓரளவு செய்யப்பட்டிருந்த போதிலும் சரித்திர நாவல்களை அநேகமாக முறைப்படி யாரும் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை என்றே கூறவேண்டும். விமர்சகர்களின் மனதில் சரித்திர நாவல்கள் என்றவுடனேயே பொதுவில் ஒரு அறுவறுப்புத் தோன்றிவிடும் போலிருக்கிறது. இப்படி ஒரு நிலை ஏற்பட்டதற்கு விமர்சகர்களைப் பொறுப்புக்கூற முடியாதென்றாலும் முற்றிலும் அப்படித் தட்டிக் கழித்துவிடுவதற்கும் இல்லை. துப்பறியும் நாவல்கள் விமர்சனத்திற்கென்று ஏறிட்டுக்கூடப் பார்க்கப்படாமல் எப்படி ஒரேயடியாக ஒதுக்கித் தள்ளப்படுகின்றனவோ அதுபோலவே சரித்திர நவீனங்களும் இதுவரை தமிழில் முறைப்படி உரைத்துப் பார்க்கப்படவில்லை. கல்கி தோற்றுவித்த சில சரித்திரப் பாத்திரங்களுக்கே கையையும் காலையும் ஒட்டவைத்து சரித்திர நவீனங்கள் என்ற பெயரில் ஒரு புதுவகை 'இறந்தகால துப்பறியும் நாவல்களை' உருவாக்கக் கிளம்பிவிட்ட தமிழ் சரித்திர நாவலாசிரியர்கள்தான் இந்த நிலையை ஏற்படுத்தியதற்கு முழுக்க முழுக்கப் பொறுப்பு என்ற போதிலும் விமர்சகர்களுக்கும் அத்தனையையும் இப்படி ஒரே மட்டாக ஒதுக்கிவிட்டுச் செல்லும் போக்கிருப்பது சரியில்லை. நா. பார்த்தசாரதியின் மணிபல்லவத்தை, விமர்சனக் கண்ணுடன் பரிசீலித்தபோது இந்த உணர்வே என் உள்ளத்தில் எழுந்தது

சரித்திர நாவல் சீசனின் நிர்ப்பந்தத்தினாலோ என்னவோ, சரித்திர நாவல் எழுதப்போவதாகக் கொடிகட்டி அறிவிப்புச் செய்துவிட்டு தனது மணிபல்லவத்தை எழுதத் துவங்கியிருக்கிறார் நா. பா. ஆனால் கொலம்பஸ் இந்தியாவை புதிய வழியில் சென்று கண்டுபிடிக்கப் போவதாக உலகறியக் கூறிவிட்டுச் சென்று எதிர்பாராத விதமாக மிகப் பெரிய அமெரிக்கக் கண்டத்தையே கண்டு சொன்ன பெருமைக்குள்ளானதைப் போல, நா. பா. வும் தனது மணிபல்லவத்தில் தான் மேற்கொண்ட நோக்கத்தில் ஏமாந்துவிட்டு, ஆனால் "எதிர்பாராத இன்னொரு துறையில் மகத்தான சாதனையை நிலைநாட்டியிருக்கிறார், மணிபல்லவத்தில் பக்கத்துக்குப் பககம் ஒவ்வொரு விதமான வெற்றிக்கும் தோல்விக்கும் பழங்காலத்தில் இப்படி இப்படி பெயர் என்ற வழக்கொழிந்துபோன சொற்களை தனது மொழி அறிவின் துணைகொண்டு சொல்லியிருக்கும் நா.பா.வையே அவர் பெற்றுள்ள இந்த மாதிரியான ஒரு எதிர்பாரா வெற்றிக்கும் என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டால் என்ன என்று எனக்குத் தோன்றுகிறது.

'சரித்திர நாவல் என்றால்' அரசன் — அரசி, படைவீரர், படைத்தலைவர், அமைச்சர் என்று கதாபாத்திரங்களை வகுத்துக்கொண்டு எழுதுவதே இதுவரை வழக்கம். இதனால் ஆண்ட வாழ்வின் ஒரு பகுதி ஒளி நிறுவிக் காட்டப்பட்டதே தவிர ஆளப்பட்ட வாழ்வு என்ற பெரும்பகுதி விவரிக்கப்பெறவில்லை'. தனது சரித்திர நாவலுக்கான - மணிபல்லவத்துக்கான – தோரண வாயிலில்' இப்படிக் கூறுகிறார் நா. பா. தமிழ் சரித்திர நவீனங்களின் மேல்—அவர் எழுதிய பாண்டிமாதேவி உட்பட—அவருக்கு ஏற்பட்டிருக்கும் மனக்குறையைத் தெரிவாகக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன இந்தச் சில வரிகள். இந்தக் குறையை நிறைவு செய்வதற்காகவே மறந்தும் கூட மணிபல்லவத்தில், மேலே கூறப்பட்ட அரசன், அரசி, படைத்தலைவன் அமைச்சர் போன்ற பாத்திரங்களை நுழைய விட்டுவிடாமல் மிகஜாக்கிரதையாக இருந்திருக்கிறார் அவர். ஆனால் . அவருடைய இந்த மிகப்பெரிய அசையை நிறைவேற்றி வைக்காமல் மணிபல்லவம் மிகப் பெரிய அளவுக்கு அவரை ஏமாற்றியுள்ளது என்பதைக்கூறித்தானாக வேண்டியுள்ளது.

வரலாற்று நவீனம் என்றால் முதலில் அதில் வரலாற்றின் ஏதாவது ஒரு பகுதி இருக்கவேண்டும் என்பதில் யாருக்கும் இரண்டு அபிப்பிராயம் இருப்பதற்கில்லை. ஆனால் மணிபல்லவத்தில் வரலாற்றின் வாடையே இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு மணிபல்லவத்தின் கதாநாயகனை இளங்குமரனிடம் அடிக்கடி தலைநீட்டும் வாய்ச்சாதுாயத்துடன் கூடிய பிடிவாதத்தைப் போல நா. பா. விடமும் 'அரசன், அரசி, படைத்தலைவர், அமைச்சர் போன்ற பாத்திரங்களில்லாத சரித்திர நவீனம் படைக்கவேண்டும்' என்று தோன்றிவிட்ட பிடிவாதமான ஆசைதான் காரணமாக இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. வரலாற்றை மன்னர்களும், அமைச்சர்களும் படைவீரர்களுமே உருவாக்கியதாக ஒரு பிரமையைத் தோற்றுவித்து விட்ட சரித்திர ஆசிரியர்களின் போக்கையும், சரித்திர நாவல்களை அதே பாணியில் எழுதப் புகுந்துவிட்ட எழுத்தாளர்களையும் குறைகண்டு ஒதுக்கிய நா.பா., வரலாற்றை உருவாக்கியதில் அந்தந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களுக்கும் மிகப் பெரிய பங்குண்டு என்ற உண்மையைக் காட்டுவதில் கவனம் செலுத்தியிருந்திருப்பாரேயானால் அவருடைய நோக்கமும் ஆசையும் நிச்சயம் ஈடேறி இருக்கவே செய்யவும். ஆனால் வரலாற்று நவீனத்தில் இதுவரை விட்டுப்போன பகுதிக்கு ஒளி பரப்பிக் காட்டப் போகிறேன் என்று கூறிச்சென்ற அவர் இதுவரை மாற்றவர்கள் வெளிச்சம்போட்டுக் காட்டிய பகுதியை முழுக்க இரட்டடிப்புச் செய்யப்புகுந்ததன்

(135-ஆம் பக்கம் பார்க்க)

# இலக்கிய பாட்டைகள்

## வால்மீகியும் வியாசரும்

### மணிக்கொடி கு. சீனிவாசன்

'இலக்கிய பாட்டைகள்' என்ற தலைப்பு என்னை திடுக்கிடச் செய்தது. 'ட்'கர ஒன்று இரட்டித்து விட்டதோ என்று கூட சந்தேகப்பட்டேன். சற்று யோசித்தேன். தவறு இருக்காது என்று தீர்மானித்தேன். அப்படி ஆனுல் ? கண்ணை மூடிக்கொண்டு மீண்டும் யோசித்தேன். வால்மீகி நின்று கொண்டு இருந்த பாட்டை லேசாகத் தென்பட்டது. அவர் நின்று கொண்டிருந்தது இலக்கியப் பாட்டை அல்ல; வழிப்போக்கர்களுடைய நெஞ்சங்களைக் கலக்கிய பாட்டை. அவர் கையிலிருந்தவை எழுத்தாணியும் சுவடியும் அல்ல; வில்லும் வாளும். காட்டு வழியில் போனவர்களைத் தட்டிப் பறித்து தர்மம் வளர்த்து வந்த புண்ணியவான் அவர். அந்தப் பாட்டை எனக்குப் பரிச்சயமில்லை. மீண்டும் யோசித்தேன். வால்மீகியும் வியாஸரும் வகுத்த இலக்கியப் பாட்டையைக் கண்டேன். அவர்கள் தனிவழி காட்டியவர்கள். அந்நாட்களில் இருந்தது ரிஷி இலக்கியம். இவர்கள் கண்டது கவி இலக்கியம். ரிஷி இலக்கியத்திலிருந்து பெருங்கிளையாகப் பிரிகிறது கவி இலக்கியம். ஆராய்ச்சி சற்று புதிது. விளக்கிச் சொல்ல முயலுகிறேன். உணர்ச்சியைப் பரப்புவது சொல். உணர்ச்சியின் விறுவிறுப்பால், துடிதுடிப்பால் சொல்லுக்குத் திடம் உண்டாகிறது, அழகு பிறக்கிறது. சொல்லின் வன்மையினுல், சோபையினுல் உணர்வுக்குத் தெளிவு பிறக்கிறது. ஆழம் உண்டாகிறது. உணர்ச்சியால் சொல்லும், சொல்லால் உணர்வும் வளம் பெறுகின்றன.

உணர்வைப் பெருக்க விரும்புகின்ற மனிதன் சொல்லைப் போற்றுகிருன். சொல்லின் திறத்தால் உணர்வைப் பெருக்கிக்கொள்ளுகிருன், ஆழமாக்கிக் கொள்ளுகிருன். அழகாக்கிக் கொள்ளுகிருன்.

சொல்லால் வாழ்வு வளம் பெற்றதற்கு வேதங்களே முதல் சாட்சி. உலகில் இயங்கும் சக்திகளைக்கண்டு வியந்த, பயந்த மனிதன், தன் உணர்ச்சிகளை வாய்விட்டுச் சொல்ல முயன்றுன். உணர்ச்சிகளை உண்மையுடன் விளக்கிய சொற்கள் சொன்னவர்களையும் கேட்டவர்களையும் தம் கவர்ச்சியில் பிணித்தன. திரும்பத்திரும்ப அந்தச் சொற்கள் நாவில் துடித்தன. அவைகளைக் கேட்கக் கேட்க செவிகளில் இன்பம் பெருகிற்று. உணர்வு சிலிர்த்தது. மனம் நெகிழ்ந்தது. அந்தச் சொற்கள் நிலைத்தன. அவைகளே வேதங்கள்.

துள்ளிக்குதித்த இளஞ்சொற்கள் காலக்கிரமத்தில் தெள்ளிய நடை பயின்றன. ஒள்ளிய ஆட்டமும் போட்டன. இவையோ ருக், யஜுஸ், ஸாமம் என்று பகுக்கப்பட்டன. யாப்புடன் மிளிர்ந்தவை ருக்வேதம். திறனுடன் நடத்தவை யஜுஸ். இசையுடன் புணர்ந்தவை ஸாமம்.

தலைமுறை தலைமுறையாக நிலைபெற்ற சொல்லே பேரிலக்கியமாகும். இந்த முறையில் வேதங்களே புராதனமான பேரிலக்கியங்களாகும். வேதந்திரங்களைக் கண்ட ரிஷிகளே முதல் இலக்கியக் கர்த்தாக்கள். அவர்கள் வகுத்ததே முதல் இலக்கியப்பாட்டை.

#### ரிஷி இலக்கியமும் கவி இலக்கியமும்

அந்தப் பாட்டை எப்படிப்பட்டது? அதன் லட்சணம் என்ன, அதன் சிறப்புகள் என்ன?

அகம், புறம் என்ற உணர்வு ஏற்பட்டு புறத்தின் தோற்றங்களையும், தோற்றங்களை இயக்கும் சக்தியையும் ஒருவாறு உணர்ந்து அந்த உணர்ச்சிகளை செய்யுளிலும் வசனத்திலும் வடித்துப் பயிலப்பழகியதே வேதபாட்டை.

இதன் லட்சணம், அறிந்ததை அறிந்தபடி இயம்புவது. புலன் கண்டதை புலன் கண்டவாறு கூறுவது. மனம் ஓர்ந்ததை மனம் ஓர்ந்தவாறு ஓதுவது. தோற்றங்களைத் தோற்றங்களாக வர்ணித்து, தோற்றங்களை இயக்கும் சக்திகளை தேவதைகளாக பாவித்துப் பாடுபவை வேத ஸூக்தங்கள். ஞாயிறும், திங்களும், மின்னலும், இடியும் தீயும், கனலும் கண்கண்ட தோற்றங்கள். இவைகளை இயக்கும் சக்தியை அக்கினி என்று பாவித்து அதை வழிபடுவது வேதபாட்டையின் முதல் லட்சணம். இதன் சிறப்பு புறச்சக்தியை பெரிதாக மதித்து அகத்தை வளப்படுத்துமாறு வேண்டி நிற்பது. 'ஏ இந்திரனே, ஏ அக்னியே, ஏ வருணனே, எமக்கு ஆயுளைக் கொடு. ஐசுவரியத்தை கொடு. தனதான்யம், பசு குதிரை கொடு. நல்வழியைக் காட்டு; தேவர்கள் நன்மை செய்வார்கள். நல்வழியில் கூட்டுவார்கள்' என்றெல்லாம் வந்தித்து வழிபடுவது வேத இலக்கியத்தின் சிறப்பு. இது ரிஷி பாட்டை என்று சொல்லலாம்.

இதில் சந்தகாலம், ஸம்ஹித காலம், பிராம்மணகாலம், ஆரண்யக் காலம், உபநிஷத் காலம் என்ற பல காலங்களைக் காணலாம். நெடுகப் போனுல் சாஸ்திரகாலம், சூத்ரகாலம், தர்சனகாலம்,

தந்திரகாலம் என்ற மாறுதல்களையும் காண லாம்.

ரிஷிபாட்டையிலிருந்து கவிபாட்டை ஆதியிலேயே விரிந்து விடுகிறது. ரிஷி உணர்ந்ததை உணர்ந்தபடி உரைப்பவன்; கவி உணர்ந்ததைச் செம்மைப் படுத்தி விஸ்தரித்து,உருப்படுத்தி கால் வைத்து, மூக்கு வைத்து, கைவைத்து கற்பனையோடு கூட்டி உரைப்பவன்.இயற்கைத் தோற்றங்களைப் பின்னணியாக அமைத்து. குறுக்கீடு சக்திகளைக் கூட்டிக்கொண்டு மனித உலகில் சஞ்சரிப்பவன். மனித உணர்ச்சிகளைப் பிரதானமாக வைத்து வீர புருஷர்களையும். வீர பத்னிகளையும், நாயக நாயகிகளாகக் கொண்டு, கதையாகச் சொல்லுவது கவி இலக்கியம்.

வேதத்தோடு வேதமாய் ஆக்யானம், உபாக்யானம், கதா இவை முளைத்து விட்டன. நாளடைவில் இவை இதிஹாஸம், புராணம். காவ்யம், நாடகம் என்று வளர்ந்து விட்டன. இது கவிபாட்டை.

ரிஷி பாட்டையிலிருந்து கவி பாட்டை பிரியும் இடத்தில் வால்மீகியும்,வியாஸரையும் காணலாம். கவிபாட்டை என்பது அவர்கள் பிரித்த வழி.வால்மீகி ஆதிகவி. வால்மீகி பாடிய ராமாயணம் ஆதி காவியம். வியாஸர் சிறந்த இதிஹாஸ கர்த்தா. ஆதிபௌராணிகர்.

## ராமன் — ஆதரிசமனிதன்

முதலில் ராமாயணத்தைப்பற்றிச் சில வார்த்தைகள். ஏழு காண்டங்கள் அடங்கிய இந்தக் காவ்யம் 24,000 சுலோகங்கள் கொண்டது. கதை இந்தியாவில் ரேடியோ கேட்பவர்கள் எல்லோருக்கும் தெரிந்த கதை. இருந்தாலும் ராமாயணத்தில் ஒவ்வொரு சம்பவமும் உண்மையாக நடந்தவையா, ஒவ்வொரு சுலோகமும் வால்மீகியின் வாக்கா என்ற சர்ச்சைகள் கிளம்பி விட்டன. சர்ச்சை, சண்டை போடுபவர்கள் போட்டுக் கொண்டிருக்கட்டும். சர்ச்சைக்கு இடமில்லாத விஷயங்களை மட்டும் ஆராய்வோம்.

இராமாயணத்திற்கு ஸீதா சரிதம், பௌலஸ்த்யவதம் என்ற பெயர்கள் இருந்ததாகவும் தெரிகிறது. இருந்தாலும் அவைகள் எல்லாம் ஒடுங்கி ராமாயணம் என்றே வழங்கிவருகிறது. ராமாயணம் ஆதிகாவ்யம் மட்டுமல்ல.அமரத்வம் வாய்ந்த காவ்யம். உலகத்தை எல்லாம் படைத்த பிரம்மாவாலேயே ஆசீர்வதிக்கப்பட்டது.

யாவத் ஸ்தாஸ்யந்தி கிரயஸ்
ஸரிதஸ்க மஹீதலே
தாவத் ராமாயண கதா
லோகேஷு பிரசரிஷ் யதி

'உலகத்தில் மலைகள் உள்ள அளவும் நதிகள் உள்ள அளவும்,மாயாத புகழுடன் விளங்கும் ராம கதை'என்று ஆசீர்வதித்திருக்கிறார் பிரம்மதேவர். ராமகதையைப் படித்தவர்களுக்குத் தெரியும் அந்த ஆசீர்வாதத்தின் உண்மை.

ஜடமான இயற்கையை விட்டு, புலனுக்குப் புறம்பான தேவர்களையும் சற்று ஒதுக்கிவிட்டு, மனிதனையும், மனித வாழ்வையும் வால்மீகி சித்தரிக்கிறார். மனிதனைப்பற்றி மனிதன் பாடிய முதல் காவ்யம் ராமாயணம். நவரஸங்களும் இலக்கியத்தில் வெள்ளமாக பாயத் தொடங்கின.

நாரதரிடம் ஞானோபதேசம் பெற்ற வால்மீகி ஞானத்தைப் பற்றிப் பாடட்டுமா. இந்திரனைப் பாடட்டுமா, சந்திரனைப் பாடட்டுமா என்று கேட்கவில்லை. அவர் கேட்டது 'உலகில் வீரபுருஷன் யார்? குணவானாகவும், கடமை உணர்ந்தவனாகவும் இருந்தவன் யார்? நன்றியறிதல் உடையவனாகவும். உண்மை பேசுபவனாகவும், திடவிரதனாகவும் இருந்தவர் யார்? நெறி தவறாதவனும், அன்பு பூண்டவனும், பண்பு நிறைந்தவனும் யாவன்? தன்னை அறிந்தவனும், சினத்தை வென்றவனும், ஒளிபொருந்தியவனும், அழுக்காறு அற்றவனும் ஆன புருஷன் யார்?' என்பதே. நாரதர் ராமன் பெயரையும், கதையையும் சொன்னார்.

ராமன் பெயரையே தியானித்துக் கொண்டிருந்த வால்மீகியின் கண்ணெதிரில் ஒரு கோர ஸம்பவம் நிகழ்ந்தது. மரக்கிளை ஒன்றில் இரு குருவிகள் ஜோடிசேர்ந்து குலவிக்கொண்டிருந்தன. குரூரவேடன் ஒருவன் அவைகளைக் குறிவைத்து அம்பு எய்தான். அம்பு தைத்து ஆண் குருவி விழுந்து மாண்டது. பெண் குருவி சோகத்தால் துடித்தது. பதறிப் பதறிக் கீச்சிட்டது. குருவியின் உடலில் தைத்த அம்பு முனிவரின் உள்ளத்தில் தைத்தது. குருவியின் உடலினின்றும் பொங்கிய ரத்தம்போல் வால்மீகியின் உள்ளத்திலும் கருணை வெள்ளம் பொங்கிற்று. வேடனைச் சபித்தார். சாபம் கவிதை நயத்துடன் வந்தது. குருவிக்குக் காட்டிய கருணையில் தன் கவித்திறனை அறிந்தார். ராமாயணம் பிறந்தது.

## பண்புச் சிகரம்

மனித உள்ளத்தைக் கொள்ளை கொண்ட லட்சியங்களெல்லாம் ராமாயணத்தில் உருவெடுத்துத் திகழ்கின்றன. நாகரிகம் முதிர்ந்த இந்நாளிலும் மனிதன் எட்டிப் பிடிக்காத பண்புச் சிகரங்களை வால்மீகியில் காணலாம். உலகம் போற்றும் பைபிளில் மனிதவர்க்கத்தின் கதை இருக்கிறது. அதில் இரண்டாந் தலைமுறையில் முதல் கதை என்ன? கெயின் எபலைக் கொன்றது: பொறாமை கொண்ட அண்ணன் பேதைத் தம்பியை மாய்த்தது. இதை நெறியாகக் கொள்ளவில்லை. நடைமுறையாகக் காட்டப்படுகிறது. 'பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ'. என்ற பொன்னெறியை விளக்குவது ராமாயணம். அரசுரிமை குறுக்கிட்டும் மாறாத உடன் பிறப்பு உறவு. கிரேக்க இதிஹாஸம் இலியாதில் அந்நிய

னோடு ஓடிப்போன ஹெலன் உல்லாஸ வாழ்வு நடத்துகிறாள். கணவனோடு ஆட்சி துறந்த ஸீதை சிறைப் பட்டபின் அன்ன ஆகார நித்திரை இல்லாமல் தவம் கிடக்கிறாள். கற்பும், கடமை உணர்ச்சியும் உன்னத லட்சியங்களாக இருக்கும் வரையில் ஸீதையும் ராமனும் நெஞ்சை ஊக்கும் காந்த ஜோதிகள்.

மனித ஸமூகம் லட்சிய வாழ்வை நாடிக் கொண்டேயிருக்கிறது. வால்மீகி காட்டும் பாட்டை லட்சிய வாழ்விற்கு ராஜபாட்டை.வால்மீகி காட்டுவது லட்சிய வாழ்விற்கு ராஜபாட்டையானால் வியாஸர் காட்டுவது ராஜபாட்டைக்குப் பக்கத்துப் பாட்டை. கொஞ்சம் கரடுமுரடு சந்து பொந்துகள் வழியே போகவேண்டியிருக்கும்.

பிரம்மா உபதேசம் செய்து வால்மீகி கண்ட காட்சி ராமாயணம்.வியாஸர் தான் கண்டகாட்சியிலிருந்து கவனம் செய்து பிரம்மதேவரை வழி கேட்டது பாரதம்.

### பாரதம்—பூரண நூல்

'மகா பாரதம்' உலகிலேயே மிகமிகப் பெரிய நூல். வியாஸர் இவ்வளவுதான் எழுதினார். மற்றவையெல்லாம் இங்கு சேர்க்கப்பட்டது, அங்கு சேர்க்கப்பட்டது என்று ஆராய்ச்சிக்காரர்கள் காட்டுவார்கள். காட்டட்டும். முதலில் 'ஜய' என்ற காவியம் இருந்ததாம். பெருகிப் பெருகி 'பாரதம்' என்று ஆயிற்றாம். எப்படி இருந்தாலும் இன்று இருப்பது லட்சம் சுலோகங்கள். கிரேக்க மகா காவியங்களாகிய இலியாதையும், ஒடெஸேயையும் சேர்த்துப் பார்த்தால் கூட மகா பாரதத்தில் அரைக்கால் பங்குகூட இருக்காது. அவ்வளவு பெரிய காவியம் மகாபாரதம்.

பாரதத்தின் பெருமையைச்சொல்லும்போது' 'மற்றைய கிரந்தங்களில் எல்லாம் உள்ள பொருள் அதில் உண்டு; இதில் இல்லாத பொருள் வேறு எந்த கிரந்தத்திலும் கிடையாது' என்று சொல்லுவார்கள். இது மிகைப்படக் கூறுவதானாலும், மகாபாரதத்திலுள்ள விஷயப் பெருக்கம் வியக்கத்தக்கது.வியாஸர் பிரம்மாவிடம் சொன்னபடி இந்த காவியத்தில் வேதத்தின் ஸாரம் இருக்கிறது. சாஸ்திரங்கள், வேதங்கள் போதிக்கும் கருத்துக்கள் இருக்கின்றன முக்காலமும் நிலை நின்ற உண்மைகள் இருக்கின்றன வர்ண தர்மங்கள், ஆசிர தர்மங்கள், ராஜநீதி, அஸ்திரவித்தை, மந்திரவித்தை, ஜோதிஷம், நக்ஷத்திர வித்தை, தேவதைகளின் வரலாறு, தீர்த்த விசேஷங்கள், தேசாசாரங்கள், வெவ்வேறு நாட்டினரின் நடை உடை பாவனைகள்—இவைகள் எல்லாம் இருக்கின்றன என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

குறிப்பாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால் பாரதம் கவிதைக் களஞ்சியம் மட்டும் அல்ல. அது வாழ்க்கைக்குக் 'கண்ணாடி. ஒழுக்கம் எக்காலத்திலும் லட்சியத்துக்குக் கட்டுப்பட்டதல்ல' என்பதை விளக்குவது. தர்ம சந்திரனை பீஷ்மரே தர்மம் தெரியாமல் விழிக்கிறார். கர்ம யோகி கண்ணனே பிரதிக்ஞை மீறுகிறார். ஸத்யந் தவறாத தர்மனே முக்கால் உண்மை பேசுகிறார். இவை கிடக்கட்டும்: ஒரு நுட்பமான விஷயத்தில் வியாஸர் பார்வையைக் கூர்செய்கிறார் பாருங்கள். அர்ஜுனன் திரௌபதையை ஸ்வயம்வரப் போட்டியில் வென்றுகொண்டு வந்திருக்கிறான். பாண்டவர்கள் வேடிக்கையாக, 'அம்மா பிக்ஷை கொண்டு வந்திருக்கிறோம்' என்று சொல்லுகிறார்கள். பிக்ஷை என்னவென்று தெரியாமல், 'ஐவருமாகப் புசியுங்கள்' என்று கட்டளையிட்டு விடுகிறாள். தர்ம ஸங்கடமான நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஒரு பெண்ணை ஐவர் மணக்கக்கூடாது. அம்மா சொல்லைத் தட்டக்கூடாது. என்ன செய்ய? தம்பிமார்கள் எல்லாம் சற்று தர்க்கம் செய்துவிட்டு அண்ணாவின் தீர்ப்பே முடிவென்று விட்டுவிட்டார்கள். தர்மபுத்திரர் சாஸ்திர விதிகளை ஆராய்ந்து பார்த்தார், திரௌபதை அவர்களைப் பார்ப்பதையும் பார்த்தார். அம்மாவின் கட்டளையை நிறைவேற்றுவதுதான் தர்மம் என்று தீர்ப்புக்கூறினார். வியாஸர் கண் எங்கே நின்றது? தர்மன் கண் எங்கே நின்றது? திரௌபதி கண் எங்கே நின்றது? தம்பிகள் கண்கள் எங்கே நின்றன? ஏழு ஜோடி கண்கள் எங்கே நின்றன? ஏழு ஜோடி கண்கள் வேண்டியிருந்தன தர்மத்தைக் காண! இப்படித் தோண்டித் தோண்டி தர்மத்தைக் காட்டும் நூல் மகா பாரதம்.

இந்த இதிஹாஸங்களின் தனிச்சிறப்புகள் என்னவென்றால், இதரபாஷை இதிஹாசங்களைப் போல் நிகழ்ச்சிகளைக் கூறிக்கொண்டே பாடிக் கொண்டே போவது என்று இல்லாமல் இடை இடையே தர்மத்தை விளக்கிச் சொல்லுதல், சீலத்தை எடுத்து உரைத்தல், புண்ணிய பாவங்களை விவரித்துக் காட்டுவது இவை போன்றவை. வந்தனை வழிபாடுகள் ஓய்ந்து சிந்தனையும் தெள்ளறிவும் நிறைந்த வேதவித்துக்களின் விருக்ஷரூபம் ராமாயணமும்,மகாபாரதமும். சந்தஸ் காலத்தில் செடியாக இருந்து,ஸம்ஹிதை காலத்தில் மரமாகி பிராம்மண காலத்தில் கிளை விட்டுத் தழைத்து, ஆரண்யக் காலத்தில் பூத்துப் பிஞ்சுவிட்டு உபநிஷத்துக்களில் பழுத்து விதை முற்றிய தர்மதத்துவங்கள் இதிஹாஸங்களாக மீண்டும்தழைத்தன. தனி உணர்வு எவ்வளவு வகைகளில் தளைபூண்டு நிற்கிறது, கடமை உணர்ச்சி இல்லாத வாழ்வு எவ்வளவு சங்கடங்களுக்கு உள்ளாகிறது, பாபமும் புண்ணியமும் எப்படிப் பின்னிக்கிடக்கின்றன, உலகத்தில் இன்பதுன்பங்களுக்கு எது காரணம், வாழ்வின் உறுதிப் பொருள்கள் யாவை என்ற நுட்பங்கள் எல்லாம் இந்த இரண்டு இதிஹாஸங்களிலும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரம் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் வால்மீகியும், வியாஸரும் ஏற்றிய அணையா விளக்குகள் நமது இலக்கியப் பாட்டையில் இன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

# கணபதி துணை

ந. பிச்சமூர்த்தி

நூற்றிமுப்பது டிக்ரி வெய்யில். ஆனுல் பறக்கும் பறவைகள் சுருண்டு செத்து கருகி விழவில்லை, ஒருவேளை டிக்ரி கணக்கு தப்பாக இருக்கலாம் அல்லது உயிர் இந்த டிக்ரியில் வாழும் வல்லமையைப் பெற்றிருக்கலாம்.

எனக்கென்னவோ டிரங் பெட்டி மூடியைத் திறந்தது போல் மண்டை வெடித்துப் போய்விட்டது. பயணத்தை நிழலின் இடையீடின்றி தொடர முடியாதென்று பட்டுவிட்டது. நல்ல வேளையாகப் பிள்ளையார் கைகொடுத்தார், ரொம்ப இடியாத பிள்ளையார் கோவிலும் முன்னுல் முளைத்திருந்த செவ்வரளிச் செடிகளும் ஆதரவாய் அழைத்தன.

அம்மாடி! எவ்வளவு மிருதுவான மயிலிறகு தடவுகிறது. டிரங்கு பெட்டி மூடிக்கொண்டு விட்டது. கண் கூட மூடி உள்ளே ஆழ்ந்து கனலில் வெந்தவனுக்கு ஆறுதலளித்து விசிறிக் கொண்டிருந்தது.

'அடே பையா?'

'ஏன்?'

'உன்னை இல்லேடா. ஏய் உன்னைத்தாண்டா!'

பிள்ளையார் காது அசைந்தது, 'இதோ பார்த்தாயா-அவனை. கோழி கிளறிப் பார்ப்பது போல வேலிக் காலில் எதையோ தேடுகிருனே—அவனை'.

'ஊம். பார்த்து விட்டேன்.'

'அவன் தாயார் வந்திருந்தாள்.பழுத்தபழம். அவள், புருஷன் கூட காம்பில் சுழன்று சுழன்று கொண்டிருக்கிருனும், அவர்கள் மகன் தான் இந்தப் பயல், பயல், என்ருல் பன்னிரண்டிருக்கும் என்று நினைத்து விடாதே. இருபத்திஐந்து வயதிருக்கும், கூழைப் பாம்பு. கறட்டு ஒணுன். அவனுக்கு ஒரு வேலை வேணுமாம். இத்தனை நாளாய் அவர்கள் சம்பாதித்துப் பொழுதை ஓட்டிவிட்டார்கள். இனி இவன் சம்பாதிக்காவிட்டால் பட்னி தாஞம், கூலி வேலை, திருட்டு, புரட்டிலே, வண்டி இனிமே ஓடாதென்று சத்யம் வைத்து விட்டாள். அவன் காலைப் பார்த்தாயா ஈர்க்குச்சி மாதிரி பிறவி அப்படி, இவனுக்கு யாரும் வேலை தர மாட்டேன்கராங்களாம். நீ தான் கதி என்று வந்து கழுத்தைக் கட்டிக் கொண்டு விட்டாள். காலைப் பிடித்தாலாவது உதறிவிட்டுப்போகலாம். முத்தம் கொடுக்க வருகிறப்போல கழுத்தைக் கட்டிக் கொண்டால்? இந்தப் பழம் வந்து கொஞ்சினது நச நச வென்று ஈ மொய்க்கிறது போல் இருந்தது. இவனுக்கு ஏதாவது வேலை பார்த்துக் கொடு. இல்லாத போனுல் என்னை முத்தமிடாமல் விட மாட்டாள்;'

'சரி அப்பா'.

'நிச்சயமாய்?'

'அசையாதவன் பொய் ஏனப்பா சொல்லப் போருன்? அசைந்தால் இசைய வைக்க வேண்டி வரும் இசையவைக்கப் போனுல் தான் பசை வேணும்.'

'அப்பொழுது சரி'...

யார் எங்கிருந்து பேசினதென்று எனக்குத் தெரியவில்லை. என்னை இல்லை என்று அதட்டி விட்டதால் பிள்ளையார் பதில் சொன்னுர் போலிருந்தது. அவருக்குத்தான் என்றும் உடனே நிச்சயமாகி விட்டது.

கண்ணைக் கசக்கிக்கொண்டு அகல விரித்துப் பார்த்தேன். எதிரே குட்டி யானை ஒன்று குச்சியைத் துதிக்கையில் வைத்துக்கொண்டு நின்றது தெரிந்தது. பக்கத்தில் கிருதா மீசை மாவுத்தன் நின்று கொண்டிருந்தான். யானைக்கு அரளிச்செடி நிழல் வேணுமா, போதுமா? ஆனுல் மாவுத்தனுக்கு வேணும். அப்போதுதான் கறட்டு ஒணுன் மாவுத்தன் கண்ணில் பட்டான்.

'தம்பி இங்கே வா.'

அவன் கால்களைத் தயங்கித் தயங்கி வைத்துக் கொண்டு அருகில் வந்தான்.

'என்ன பண்றே அங்கே?'

'தேடறேன்'

'எதை'?

'ஏதாவது கிடைக்குமா இன்னுட்டுத்தான்,'.

'சரி யார் நீ?'

'நான் வெறும் பயல், தெருமுனைத் திண்ணையிலே இருக்காங்களே அவுங்க மவன். ஒலகத்திலேயே எனக்கு வேலை இல்லேனுட்டாங்க. இங்கே தேடறேன்.'

'ஒன்னை மாதிரி ஆளைத்தான் நானும் தேடிக்கிட்டு வர்றேன். நீ வந்து எங்கூட இருந்துக்க. நீ ஒண்ணும் செய்யவேணும். கூப்பிட்ட குரலுக்கு ஹூம்ன்னு போதும் நான் யானை யோடெ போனு கூடவா. குளுப்பாட்டினு கரையிலே நில்லு. நாணலை கீணலை புரட்டிப்போடு, தெரிஞ்சுதா?

'சம்பளம்?'

'சம்பள மில்லாமெயா? ஒனக்கு அவுங்களுக்கு மூணு மட்டை சோறு மூணுவேளை தாரேன். இன்னம் என்ன வேணும்?'

'சின்னதா இருக்குமா பெரிசா இருக்குமா?'

'பாரேன் தெரியுது...'

ஆடிக்கொண்டிருந்த யானைக்குட்டி கால்கடுப்புக்கு அறிகுறியாக நகர ஆரம்பித்து விட்டது. யானையின் மனம் அறிந்த மாவுத்தன் வாடா என்று கிளம்பிவிட்டான். யானைக் குட்டிக்கு மாத்திரம் என்றில்லாத பொது அழைப்பு. சம்பள நிபந்தனையும் பரவாயில்லை. கறட்டு ஒணுனும் கிளம்பிவிட்டான்.

வழியிலே சின்ன தென்னந்தோப்பு. தோப்பைக் கண்டதும் யானை நிழலுக்கு நின்று விட்ட

தென்று மாவுத்தன் நினைத்தான். தோப்பில் யானைக்குட்டி வந்து நின்றதைப் பார்த்த வள்ளி குழந்தையைத் தூக்கிக்கொண்டு அவசரமாக வெளியே வந்தாள். குழந்தைக்கு யானையைக் காட்டிக்கொண்டே குடிசைக்குள் குரல் கொடுத்தாள். 'இந்தா, யானைக்குட்டி வந்திருக்கு, இளநீர் பறிச்சுப்போடு.'

சோம்பல் முறித்துக்கொண்டு முருகன் வெளியே வந்தான் 'நம்ப யானை. என்ன மாவுத்தரே சொகமா? பிள்ளையாரு ருசிகண்டுக்கிட்டாரு. சித்ரா பௌர்ணமிக்கு போகக் குள்ளே இந்த தோப்பிலே வந்து நின்னிங்களே நான். இளநீர் பறிச்சுப் போட்டேனே நெனைப்பு இருக்குங்களா? உங்களுக்கில்லாட்டியும் யானைக் குட்டிக்கு இருக்குது. பாருங்களேன் கையை வளைச்சு எப்படிக் கேக்குது...ஒரு வருஷம் இருக்குமா குட்டி?'

'இருக்கும்.'

''மவனுக்கும் சரியா ஒரு வருசமாவுது. என்ன மா பாக்கிறான் பாருங்க.''

முருகன் அலக்காலே இரண்டு இளநீரை லாகவமாகப் பறித்துத் தென்னை போர் மீது தள்ளினான். பெரிய யானையாய் இருந்தால் அப்படியேகொடுத்து விடலாம், குழந்தை மட்டையை உரித்து தேங்காயை யானைக்குட்டி இடம் கொடுத்தான். யானை தேங்காயைத் தின்ற பிறகு மாவுத்தன் கிளம்பினான்.

''ஏன் மாவுத்தரே மணியைக் காணோம்?''

''இதோ. இருக்கு பார்'' என்று யானை மேலிருந்த பையிலிருந்து மணியை எடுத்து யானையின் இரு புறமும் தொங்கப் போட்டான். வீட்டுக்குள் கோட்டும் தலைப்பாகையுமா உட்காரலாமா? அதிகாரம் நடத்தும் போது அங்கம் வேண்டும். மாவுத்தன் நியமத்தை மீறுவதில்லை, வெய்யில் தாழ்ந்து விட்டதால் அதிகார கோலம் பூண வேண்டியதுதானே!

கறட்டு ஒணான் இதுவும் ஒரு அதிசயமாஎன்று பார்த்துக் கொண்டிருந்தான். ஆரம்ப பாடமெல்லாம் பிரமிப்பாய் பயமாய் அதிசயமாய் புதுசாக இருக்கத்தானே செய்யும்.

தெரு வந்து விட்டது. தெரு வருவதற்குள் மணி ஓசை போய் விட்டபடியால் வீடுகளிலிருந்து பெண்களும் குழந்தைகளும் வெளியே உருண்டோடி வந்தனர்.

முதல் வீட்டுக்குப் போனதும் யானைக்குட்டி தானாகவே நின்று விட்டது. வாடிக்கை வீடு! நெற்றியில் விபூதியும் முகத்தில் மஞ்சளுமாக ஒரு பெண் சின்னக் கூடையில் அரிசியும் வெல்லமும் பத்து மிளகுடன் கலந்து எதிரே வைத்தாள். யானைக்குட்டி கூடை விளிம்பைத் தொட்டுப் பார்த்து விட்டு கையை உள்ளே விட்டது.

''ஏன் மாமா? மொளவு எதுக்கு?''

''வெறும் அரிசி உடம்புக்காகாது?''

''யானைக்குக் கூடவா?''

''ஒங்க தாத்தாவுக்குக் கூட.''

அவனுக்கு ஒரு மாதிரியாகி விட்டது. தெரியாததை தெரிந்து கொள்ள விரும்பினால் பரிகாசமா? இருக்கட்டும்.

''என்ன மாவுத்தரே — அந்தப் பையன் யாரு?''

''புச்சு. எனக்கும் யானைக்கும் துணை. குளுப்பாட்ட தேய்க்க, மேய்க்க''

''ஆறு மேய்ப்பீங்களா?''

''அதொரு வார்த்தைக்கு எவ்வளவோ சொல்றோம் .. செய்யறோம்களா? அது ஒரு இது''......

இப்படி ஆரம்பித்த உத்யோகம் வேளை தவறாமல் கோவில் பிரசாதத்தைக் கொண்டு வந்து சேர்த்தது. அவர்கள் மூவருக்கும் போதும், இப்பொழுது விடிந்து விட்டது. அவனும் அப்பன் ஆயிக்கு சோறு போட்டு விட்டான். ஆறு மாதத்திற்குப் பிறகு சம்பாதிக்கவே ஆரம்பித்து விட்டான்......

'இதப் பாரம்மா. வாயப் பயம் கொடுத்தா வாங்கித்திங்குதே. இது இதுக்கு கைதானே மாவுத்தரே! இந்தா காசு.'

'அது கிட்டவே குடு பாப்பா.'

'மாட்டேன் மாட்டேன். அது துண்ணூடும், தொண்டையிலே அப்புறம் சிக்கிக்கும்.'

'சும்மா குடு. திங்காது.'

குழந்தை கொடுத்த காசை வாங்கிக்கொண்டு சலாம் வைத்து விட்டு, காசை மாவுத்தனிடப் கொடுத்து விட்டது. அவன் வாங்கி மடியில் கட்டிக் கொண்ட பொழுது சில்லரை புரளும் ஓசை கேட்டது.

'பாத்தியா அம்மா. எவ்வளவு கெட்டிக்கார யானைக் குட்டி. என்னெம் போல மண்ணெண்ணைக் குக் குடுத்த காசை வழியிலே போட்டுட்டுத் தேடாமெ. அதுக்கு எல்லாம் நல்லாத் தெரியுதே'

'அது பிள்ளையாரில்லே.'

பிறகு குழந்தையின் தாயார் ஒரு பொட்டுக் கூடையில் அரிசி கொண்டு வந்து யானையின் முன் வைத்து விட்டு எதோ மறந்தாப் போல உள்ளே போய்த் திரும்பினாள்.

'அம்மா, அந்தக் கறட்டு ஒணான் இருக்குபாரு. அரிசியைத் துணியிலே எடுத்து மடியிலே கட்டிக் கிட்டுது. வவுத்தே பாரு பிள்ளையார் மாதிரி.'

'ஏண்டா யானைக்கு அரிசி வச்சால் நீ எடுத்துக் கிட்டே?'

'இல்லீங்க அம்மா. வூடுவூடா தின்னுக் கிட்டு வருதே. இதையும் தின்னு பச்சிலையைத் தேடிக் கிட்டுப் போறவன் நானல்ல.'

'இதை நீ எடுத்துப்பியா?'

'நான் ஏன் தொடறேன்?'

'கோவில்லே இதுக்கு காலே ஒரு வேலே, மாலே ஒரு வேளை அரிசி பருப்பு வெல்லம் மிளகு. பாக்கி வேளைங்களிலே—இதை வப்போம்'

'பொய் சொல்லாதே.'

'பொய் சொன்னு நாக்கு புழுத்துப் போவாது? .....'

'இன்னிக்கு ரெண்டு பிடியாடா?'

'பின்னெ?'

மாவுத்தன் கண்டுக்கிடமாட்டான்?'

'அவன் ஏன் மூச்சு காட்றான்? எனக் கொரு நாள். அவனுக்கு ஒரு நாள். தினம் அவனுக்குக்காசு வேறெ எனக்கு அதிலே பங்கா தர்றான்? இன்னம் என்ன கொள்ளை? என்னை அவன் சொன்னு

அவனைப் போய் தர்மகர்த்தா கிட்டே சொல்லி தொலைச்சிட மாட்டேன்?'

'அப்பொ ரெண்டு பேருமா விபூதி போடற யானைக்கு நாமம் சாத்துறீங்க?'

'நல்லாச் சொன்னே. அதான் கடவுள் ரகசியம் இதெல்லாம் ஒங்களுக்குப் புரியாது. அது பிள்ளையாரு அல்ல. தெருவிலே போனா அதுக்கு வவுறு நிறைஞ்சு போவுது. எங்களுக்கும் சம்பாராதனை ஆவுது. ஒரு கல்லுலே ஒம்பது காயை அடிக்க மனுசனாலே முடியுமா? சாமி அல்ல, பிள்ளையார். பிள்ளையாருக்கு நாமம் போட நம் மாலே ஆவுமா? புரியுதா?'

நல்லாப் புரியுது என்றார்கள் பெற்றோர்கள். அது கிண்டலாக அவனுக்குப் படவில்லை. காதைப் பிடித்துக் கொண்டு இரண்டு தோப்புக் கரணம் போட்டு தன் விசுவாசத்தைக் காட்டினான்......

அப்பொழுது யானைக் குட்டி வீறிட்டுக் கத்திற்று. யானைப் பாகன் என்ன செய்தானோ!

இந்த சத்தம் கேட்டு திடுக்கிட்டு உருண்டேன்......

இப்பொழுது 104 டிக்ரி வெய்யில் இருக்கும். பிள்ளையார் தான் இருக்கிறார். நானும்தான் இருக்கிறேன். பயணம் புறப்பட! இன்னம் கொஞ்சம் வெய்யில் இறங்கணும். அது வரையில் இங்கேயே தான்.

அரளி மலரின் வாசனை லேசாக வீசிற்று.

என் கால் ஈர்குச்சிபோல் தோன்றுகிறது. ஆனால் நான் மாவுத்தன் என்ற சந்தேகம் மட்டும் விடவில்லை.

---

# வழியும் விளக்கும்

**எஸ். வைத்தீஸ்வரன்**

நாய்.........
நடுப்பாதையில்
'வீல்' என்று
விதியற்றுக் கத்தியதும்
கார்,
மண்ணைப் பிறாண்டி
அரை மனதாய் நின்றாலும்
'ஆரென்று' பார்த்துவிட்டு
அமைதியாய் உருண்டது......
கண்டு கண் அதிர்ந்து
கலங்கினேன்......

நூலென்ற கால்
இடுப்புத் தூக்காமல்
இழுத்துத் தேய,
நுரை முச்சும்
பாழும் பேச்சற்ற நாக்கும்.........
வாழ்வைக் கவ்விய சாவாய்
யாரும் தூக்கத் துணியாத
மண்ணில்,
மல்லாந்த ஜீவன் கண்டு
மறுகிப் போய்
வருடப் போனேன்.
'காக்காதே கழுதையை......
காட்டாதே கருணையை'

முதுகில் பாய்ச்சிய எருமைக்கொம்பாய்
செவியில் காய்ச்சிய இரும்புத் தூளாய்
சொல் என்னைத் தள்ளியதும்...
சுற்றிப் பார்த்தேன்—
செங்கண் வலைவண்டி
நாற்கால் நகரப் பன்றி,
'செத்த பாம்பை'
சாகடிக்கத் .....தூக்கியது
நான் 'ஏனென்றேன் !

''கழுத்தில் பட்டையில்லை கழுதைக்கு
உடலில் உயிர் இருக்க உரிமையேது ?
சட்டம் படியுமையா ?
இரக்கம் குறையும்'
என்று இடித்து விட்டு
மறைந்தது.........

சட்டம் தெரியாத
நாயும், நானும்
நடுச் சந்தியில்
அடி பட்டோம்.
சிவப்பும் பச்சையுமாய்
நிறம் மாறிய
நெட்டைச் சட்டம்
முகம் வெளுத்து
மஞ்சளாச்சு

நான் வழி நடந்தேன்—

# கை சிவந்தது

காய்ந்து
சிவந்தது
சூரியகாந்தி :

கலவியிலே
தோய்ந்து
சிவந்தது
மின்னார் நெடுங்கண்கள் ;

தொல் பலநூல்
ஆய்ந்து சிவந்தது
பாவாணர் நெஞ்சம் ;

அனுதினமும்
ஈந்து
சிவந்தது
மால்சீதக்காதி இருகரமே.

[illegible] —

# திறந்த ஜன்னல்

**வ. க.**

சென்னை நகரப் பெண்கள் கல்லூரி ஒன்றின் 'காலேஜ் மேகஸின்' ஒன்று என் பார்வைக்கு வந்தது. பாராட்டப்பட வேண்டிய விதத்தில் தயாராகியிருந்த அம் மலரில் நல்ல விஷயங்கள் பல இருந்தன. அவற்றுள் என்னை வசீகரித்த ஒரு கட்டுரையின் பெயர் 'டோண்ட் ரீட் குட் புக்ஸ்!' என்பதாம்.

'நல்ல புத்தகங்களைப் படிக்காதே!' என்று ஆரம்பமான அக் கட்டுரை ரசமான முறையில் எழுதப்பட்டிருந்தது, அந்தக் கல்லூரியின் லைபிரரி முகப்பிலே இந்த உபதேசம் பொறிக்கப்பட்டுள்ளதாம். அதைப் படித்த ஒரு அவசரக்காரி, 'பின்னே எதைப் படிக்க வேண்டுமாம். கெட்ட புத்தகங்களையா?' என்று கேட்டாளாம். எழுதும் தோழி அடுத்த 'பொன் மொழி'யை சுட்டிக் காட்டுகிறாள். 'ரீட் ஒன்லி தி பெஸ்ட்' என்கிறது அந்த உபதேசம்.

நம் வாழ்நாள் சிறிது, அதில் படிப்பதற்கு நமக்குக் கிடைக்கும் நேரமோ மிகவும் கொஞ்சம். அக்கால எல்லையில், எல்லா நல்ல புத்தகங்களையும் படித்து விட முடியாது, ஆகவே, எவற்றைப் படிக்காமல் இருந்தால் நமக்கு நஷ்டமாகுமோ, அந்த மிகச் சிறந்த புத்தகங்களை மட்டுமே தேர்ந்து படிக்க வேண்டும்.

இக் கருத்துகள் ஆங்கில வாக்கியங்களாக அச்சிடப்பட்டு, மாணவிகள் பார்வையில் படும்படி தொங்குகின்றனவாம், அந்தக் கல்லூரியிலே.

'கல்வி கரையில ; கற்பவர் நாள் சில; மெல்ல நினைக்கிற் பிணி பல' என்று வளரும் பழம்பாடல் ஒன்றும் இதே எண்ணத்தைத் தானே அறுதியிட்டுக் கூறுகிறது என்று குறிப்பிட்டது என் மனம். 'கண்ட கண்ட புத்தகங்களை எல்லாம் படிக்க வேண்டாம். தகுதியுடைய சில நல்ல நூல்களை ஆராய்ந்து நன்றாகக் கற்றுப் பயனடைய வேண்டும்' என்கிறது அந்தப் பாட்டு.

அதைப் பின்பற்றிய பல புலவர்கள் 'கம்பராமாயணம்', அல்லது 'பெரிய புராணம்', அல்லது அது போல் ஏதோ ஒன்றை மட்டுமே கற்று, ஆராய்ந்து, தங்கள் புலமையையும் ஆழ்ந்த அறிவையும் வெளிப்படுத்துவதில் காலம் முழுவதையும் செலவிட்டு வாழ்ந்தார்கள். இன்றும் சிலர் இம் முறையையே தங்கள் பிழைப்பாகக் கொண்டு பிரசங்கம் புரிந்து, பணம் பண்ணி, வாழ்க்கையில் வெற்றி காண்கிறார்கள்.

ஒருவன் எல்லாப் புத்தகங்களையும்—எல்லா நல்ல புத்தகங்களையும் தான்—படிப்பது என்பது அனுபவ சாத்தியமற்றது. அதற்காக, ஒன்றிரண்டு (அல்லது, தேர்த்தெடுத்த ஒரு பத்துப் பன்னிரண்டு) புத்தகங்களை மட்டும் படித்தால் போதும் என்று விட்டுவிடுவதும் விரும்பத் தகுந்தது அல்ல. கூடிய வரை எவ்வளவு புத்தகங்களைப் படிக்க இயலுமோ, அவ்வளவையும் ஒரு தடவை யாவது படித்து விட வேண்டும். இது எனது கருத்து.

எது நல்ல புத்தகம், எது சிறந்த புத்தகம் என்று யார் விதி செய்வது? ஒவ்வொருவருக்கு வெவ்வேறு புத்தகம் மிகச் சிறந்ததாகத் தோன்றக் கூடும். சிலருக்கு கார்ல் மார்க்ஸின் 'டாஸ் கேபிடல்' தான் உயர்ந்த புத்தகமாகப் படும். வாத்ஸ்யாயனாவின் 'காம சூத்திரம்' மிகச் சிறந்ததாகத் தோன்றும் சிலருக்கு. இதை எல்லாம் படிக்காதே. டால்ஸ்டாய் எழுதிய வார் அண்ட் பீஸ், டாஸ்டாவ்ஸ்கியின் பிரதர்ஸ் கார்மஸாவ், ஜேம்ஸ் ஜாய்ஸின் யுலிஸிஸ் ஆகியவைகளை மட்டுமே படி, என்று எவராவது சொல்லக்கூடும்.

அநேக புத்தகங்களைப் படித்து வாழ்க்கையை வீணுக்கு வானேன்? எனது 'பின்னிகன் வேக் நாவல் ஒன்றை மட்டும் படித்துப் புரிந்து கொள்வதற்கு வாழ்நாளைச் செலவு செய்யுங்கள். அது அவ்வளவு தகுதி உடையது' என்று கூறியிருக்கிறான் ஜேம்ஸ் ஜாய்ஸ்.

அதனால் தான் நான் யாரையும் குருஜீயாக அங்கீகரிக்காமல்' என் இஷ்டம் போல் 'கண்டது கற்றுப் பண்டிதன் ஆக'த் துணிந்தேன். முப்பது வருஷங்களாக படித்துக்கொண்டே இருக்கிறேன். 'ஒரு தடவையாவது படித்தாக வேண்டிய புத்தகம்' என்ற தகுதியுடையவை பல இன்னும் படிக்கப் படாமலே கிடக்கின்றன. நேரம் கிடைக்கவில்லை, நான் என்ன செய்வது?

இந்த உண்மை, என்னுள் ஒரு வேதனையை வளர்த்து வருகிறது. என்மீதே எனக்கு அனுதாபம் ஏற்படுகிறது. 'எத்தகைய இன்பங்களை நான் இழந்து கொண்டிருக்கிறேன்' என்ற வருத்தம் வேறு.

அதே வேளையில், ஒரு புலவரின் வரிகள் சில என் நினைவில் படர்கின்றன. 'இந்த நூலை இதன் எளிமைக்காக ஒருமுறை கவிதைக்காக ஒருமுறை, கருத்துக்காக ஒரு முறை அழகுக்காக ஒரு முறை, உவமைக்காக ஒரு முறை, புதுமைக்காக ஒருமுறை

புரட்சி வேகத்துக்காக ஒரு முறை படித்து விட்டேன். இன்னும் இதன் நயங்கள் பலவற்றுக்காகவும் மீண்டும் மீண்டும் படிப்பேன்' என்று கூறியிருக்கிறார் ஒரு அறிஞர் ஒரு புத்தகத்தைக் குறித்து.

'மாடர்ன்' எழுத்தாளர் ஒருவர் ஒரு புத்தகத்தை 'இதுவரை ஐந்து தடவை படித்து விட்டேன். இப்போது இந்தக் கட்டுரையை எழுதுவதற்காக ஆறாவது தடவையாகப் படித்து முடித்திருக்கிறேன்' என்று கூறி அறிமுகம் செய்து வைக்கிறார்.

இவர்களுக்கு கெல்லாம் அண்ணன் ஆகத் தாவிக் குதிக்கிறார் நாவல் ஆசிரியர் ஒருவர். அவர் எந்த நாவல் பற்றிப் பேச்செடுத்தாலும், 'இதை முன்பே பத்து தடவை படித்திருக்கிறேன். இந்த அற்புத நாவலை இருபத்தேழாவது முறையாகப் படிக்கிறபோது...இந் நாவலை பதினெட்டுத் தடவைகள் படித்து ரசித்திருக்கிறேன்; என்ற தன்மையில் தான் அளிக்கிறார். இதில் முக்கியமாகச் சுட்டப்பட வேண்டிய ரசமான விஷயம், அவர் கோதைநாயகி அம்மாள் நாவலையும் நாற்பது தடவை படித்தாராம், எஸ். வி. வி. ராஜமய்யர் வகையினரின் படைப்புகளையும் பத்திருபது தடவை படித்தாராம். கிரேஸியா டெலடா, பல்லுடைக்கும் பகோடா) ஸெல்மா லாகர் லாவ், (நீ சும்மா போயாவ்) போன்ற பெரிய விஷயங்களையும் 'அம்பது அறுபது' தடவை படிக்கிறாராம்.

யேங்நொப்பங் நொப்போவ்! இந்த எழுத்தாளர் மாபெரும் சக்தி படைத்தவராகத் தான் இருக்க வேண்டும்: இவரால் இதெல்லாம் எப்படி சாத்திய மாயிற்று என்று அப்பாவியான என்னால் வியக்காமல் இருக்க இயலவில்லை.

இது விஷயமாக யோசித்துப் பார்க்கையில், எனக்கு சில சந்தேகங்கள் தோன்றலாயின. சாதாரணப் புத்தகங்கள், மத்திம நூல்கள், உயர்ந்த படைப்புகள் என்று தராதரம் பார்க்காமல் டஜன் கணக்கிலும், பல 'புது' தடவைகளாகவும் படித்து முடிக்க ஒருவருக்கு எவ்வாறு பொறுமையும் பொழுதும் கிடைத்தது? அந்த நேரத்தை உருப்படியான வழியில் செலவு செய்திருக்க முடியாதா? இவை ஒருபுறம் இருக்க, ஒரே பாடத்தை மக்கு மாணவன் பல தடவை 'இம்பொஸிஷன்' எழுத நேர்வது போல. சிலர் ஒரே புத்தகத்தை பலப்பல தடவை படிக்க நேரிடுவது ஏன்? புரியாக்குறையா வக்கிரபுத்தியா, பொழுது போகாததொல்லையா? உண்மையிலேயே, இவர்கள் சொல்கிற அளவு இவர்கள் குறிப்பிடுகிற புத்தகங்களைப் படித்திருப்பார்களா? அல்லது, ஒரு தடவை தொட்டோமா? ஸேரி, படிச்சாச்சு' 'கண்ணாலே பார்த்தோமா? ஸரி, இன்னொரு தடவையின்னு கணக்குப்பண்ணு, 'தூசி தட்டி வச்சேனா? ஆ, மற்று மொரு தடவை படித்தாச்சு,' 'மனசால் அதன் பெயரை நினைத்தேனா? தயங்குவானேன், யெட் அனதர் ஹிட்! என்று பட்டியலில் புள்ளி குத்தி, பெருமைப்பட்டுக் கொள்வார்களோ என்னவோ!

அல்லது, வேறு விதமாக இருக்குமோ? சுவாமி விவேகானந்தர் பற்றிய ஒரு நிகழ்ச்சி தெரியும் அல்லவா? ஒரு சமயம் ஒருவர் வீட்டில் பார்வைக்குக் கிட்டிய 'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' என்கிற பெரிய நூலை சுவாமி ஆவலோடு புரட்டினாராம். பக்கம் பக்கமாகப் கண்களை ஓட்டியவாறே, விரைவில் புத்தகத்தை முடித்து விட்டாராம். 'பார்த்தாச்சா?' என்று வீட்டுக்காரர் கேட்ட போது, 'படிச்சாச்சு' எனப் பதிலளித்தார் ஆனந்தர். 'இதற்குள் எப்படிப் படிக்க முடியும்?' என்று புத்தகக்காரர் கேட்கவும், 'எந்தப் பக்கத்திலிருந்து வேண்டுமானாலும் 'எந்த விஷயம் பற்றி வேண்டுமானாலும், கேள்வி கேளுங்கள். விடை தருகிறேன்' என்று சுவாமிஜீ சொன்னாராம். கேள்விகள் கேட்கப்பட்டன. அவர் சரியான விடைகளைச் சொன்னார். ஆச்சரியம் அடைந்த அன்பர் 'இது எவ்வாறு சாத்தியமாயிற்று?' என்று விசாரித்தார். 'மனோ பலம். ஆத்ம சக்தி' என்றார் சுவாமி.

முதலில் நாம் எழுத்துக் கூட்டி வாசிக்கக் கற்றுக் கொள்கிறோம். பிறகு அப்படி சிரமப்படாமல் வார்த்தைகளாகவே படித்து விடுகிறோம். அதற்கு அடுத்த வளர்ச்சி, பார்வையால் வரிகளை முழுசாகப் படிக்க இயல்வது, இச் சக்தியை வளர்த்தால், ஒரு பக்கத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே, கண்களின் மூலம், நம் உள்ளம் அதில் உள்ள விஷயத்தை கிரகித்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுவிடும். இவ்வாறு தான் நான் இந்தப் பெரிய நூலின் சாரத்தை கிரகித்தேன் என்று விவேகானந்தர் விளக்கம் கொடுத்தாராம்.

இதனினும் மேலான ஒரு படி இருக்கவும் கூடும் தானே? புத்தகத்தைக் கையில் எடுத்து, சும்மா ஒரு புரட்டுப் புரட்டிய உடனேயே, அதில் உள்ள சாரம் படிப்பாளியின் மூளைக்குள் பதிவாகி விடலாம் அல்லவா? லார்டு மெக்காலேயிடம் அபார ஆற்றல் ஒன்று இருந்ததாமே? எந்த ஒரு புத்தகத்தின் எந்தப் பக்கத்தையும் ஒரு தடவை பார்த்தாலே போதுமாம்; அவருடைய மனம் 'போட்டோ பிளேட்டின் ஸென்ஸிட்டிவ்' தன்மையோடி அந்தப் பக்கத்தை அப்படியே கிரகித்துக் கொள்ளுமாம். அதை மறந்து விடுவதுமில்லை.

இந்த விதமான சக்தி மேலே குறிப்பிடப்பட்டுள்ள மகாப் படிப்பாளிகளிடமும் இருக்கும் போலும்.

எப்படி இருந்தாலும், ஒரே புத்தகத்தை பல பல தடவைகள் படித்து முடிக்கிற 'புத்தகவிழுங்கி'களுக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன். 'மை ஹேட்ஸ் ஆஃடு தெம்!' என்று கூடச் சொல்லலாம். ஆனால், நான் குல்லா (தொப்பி) போடுவதே கிடையாதே. என்ன செய்ய?

# ரசிகனும் சமூக மனப்பான்மையும்

***தர்மு சிவராமு***

கலைத் துறையை மட்டுமல்ல.கேவலம், தெருப் போட்டு, தபால் போக்கு வரத்துக்காக வரி வசூலித்து இயங்கும் அரசியல் உள்பட எல்லாத்துறைகளையுமே சமூக வரம்புகளுள் வளர்க்க முயல்கிறோம். இதனால் ஒவ்வொரு மனிதனின் நலனும் சமூகத்தின் புகையுருவத்திற்கு பலியிடப்படும் மனப் பான்மையே தனித்த இதய இயக்கத்தைப் பற்றி கண்மூடித்தனமாக நடக்கும் ரஸனைத்துறையிலும் இயங்குகிறது. பலன் விளைவிக்காத ஒரு படபடப்போடு ரஸிகனையும் கலைஞனையும் இயக்குவிக்கிறது சமூக மனப்பான்மை விளைவு. வெறும் மன அவசம்.

கலைத்துறையின் வளத்துக்கு முதன்மையான தானம் கலைப்படைப்பேதான். சமூக மனம்பான்மையோ கலைஞனை அவனது சிருஷ்டித் தொழிலிலிருந்து 'விமர்சன' வேலையுள்ளும் இழுத்து மொட்டையடித்து விடுகிறது. வரண்ட வேளையில் உண்மைக் கலைஞன் உதாசீனப் படுத்தப்படுவதைக் கண்டு எழுந்த சீற்றத்துக்கு ஒரு இலக்கை'சமூகம் என்ற கற்பிதத்தில் கண்டதின் விளைவு இது. 'சமூகம்' கற்பிதமானது, ஏனென்றால் தனிமனிதனின் வெளியீட்டுருவமே சமூகம். அவனுக்கு அன்னியமாக சமூகம் இல்லை. ஆனால் சுற்றி வாழும் மனிதர்களைப் பற்றி நாம் கொள்ளும் அபிப்பிராயம் சமூகத்தைப் பற்றிய அபிப்பிராயமாயில்லை.

'தமிழ்' இலக்கியம், 'இன்றைய' இலக்கியம் என்ற பிரயோகங்களில் மொழிக்கும் காலத்துக்கும் ரஸனை தளைப்பட்டுள்ள தொனி உள்ளது. உடனே ரஸனை 'தன்' மொழி, 'தன்' கால வரட்சியைக் கண்டு குளறுகிறது. எனவே ரஸனையாக இயங்கவில்லை. படபடப்பே மிஞ்சுகிறது. இதன் விளைவே சமூகத்துக்கு நடக்கும் அர்ச்சனைகள். ஆனால் ரஸனை எது?

படைப்பு எப்படி அனுபவ வெள்ளத்தை பிரவஹிக்கச் செய்யும் காரியமோ, அதே போல் விமர்சனமும்,படைப்பினால் தூண்டப்பட்டு படித்தவனுடைய அனுபவத்தை அடுத்தவனுக்குத் தொற்றவைத்து ரஸனை வெள்ளத்தை உயிர்ப்பிக்கிறது. இக்காலம் நமக்கு ரஸித்துக்காட்ட உதவாது— என்கிறார்கள். படைப்பைப் போலவே ரஸனையும் தவிர்க்க முடியாதது என்று கண்டவனுக்கு அப்படித் தோன்றவில்லை. ரஸனையின் விளைவாக இங்கு ஒரு அபிப்பிராயம் உருவாகும் —அதுவும் தவிர்க்க முடியாதது.ஆனால் ஒரு அபிப்பிராயம் ரஸனையாகுமா?—அபிப்பிராயம் தான் தோன்றியாக வெளிப்படும்போது அதுக்கு உயிருண்டா? சொன்னவரின் 'அதாரிட்டியை' மீறி?

விமர்சனம் என்றால் அபிப்பிராயங்களின் தளத்தில் நின்று தேச, மொழி, கால விரம்புகளின் வரட்சியைக் கிளற முயல்வதுதான்—அது உயிரூட்டும்—என்பது அகண்டமானவினை—விளைவு பற்றிய நியதியை மறந்து தனிமனித சுதந்திரக் கூப்பாட்டில் போலீஸ் மனப்பான்மையை நினைவூட்டுகிறது. தன்னுணர்வு என்கிறமகத்தான சக்தி ஜீவனின் காரியங்களை ஆள்கிறபோது வரட்டுச் சட்டங்கள் என்னசெய்யும்? 'அதாரிட்டி' என்ன செய்யும் 'அதாரிட்டியை' திருத்துமா, தன்னுணர்வில் ஜீவன் சட்டவிதிகளின் இரும்பு வரிகள் வளைக்காத பிரக்ஞை நிலையில் திருத்துகிறான? ரஸனையும் தன்னுணர்வின் விளைவுதானே? ரஸனை உலகத்தை திருத்த இயங்குவதல்ல.

தன்னுணர்வைப் பரிமாறுவது. சமூகத்தின் போக்கு அக்கால தனிமனித இதயத்தின் போக்காகும். ஆனால் நாம் இன்றைய சமூகத்தை ஒரு தொடர்கதியின் காலக்கூறாகக் காணமுயல்கிறோம் சமூகத்துக்குத் தொடர்ச்சி இல்லை. இதுதான் சிருஷ்டியின் அழகு. இதை எந்த சமூகமும் ஒப்புக்கொள்ளாது. ஏனென்றால் ஒவ்வொருவனும், அழியாது தொடரும் ஒரு நாட்டின், சமூகத்தின் பரம்பரையைச் சேர்ந்தவனாக அரசியல் மதவாதிகள் பிரசாரத்தின் மூலம் ஆணி அடித்துவிட்டார்கள்.

விமர்சனம் படைப்பின் வரட்சிக் காலத்தில் ரஸனைக்குப் புறம்பான சவுக்கடித் தொழிலில் ஈடுபடுவதெல்லாம்'தூங்கிக் கிடக்கும்' சமூகத்தை உயிர்ப்பிக்க! இது ஒரு சமூகத்துக்கு தொடர்ச்சி இருக்கு என்ற பிரமையின் விளைவு.

நேற்றைய வேதகால சமூகத்துக்கும் இன்றையதுக்கும், அதே சமூகம் வாழ்ந்த இடத்தில் அதே சமூகத்தின் பெயரோடு சரீர பரம்பரயாக இன்றையது வாழ்கிறது என்பதுக்குமேல், அனுபவம், வாழ்க்கை நோக்கு, சாதனை என்பவற்றில் தொடர்பு இல்லை, நீ ஒரு ஹிந்துவாக சத்யத்தை அணுக முடியாது. எந்த ஹிந்துவும் முஸ்லிமும், கிறிஸ்தவனும் சத்யத்தை அவரவரின் சமூக முத்திரையோடு அணுகுவது இல்லை எவ்வித முத்திரையும் இன்றி கலாச்சாரத்தின் விதத்தை உணர்ந்த ஒரு மனிதனின் சாதனையை நம்முடையதாக்குவதுதான் நமது பெயரான ','தமிழன்'' என்பதை அவனுக்கும் சூட்டி மகிழ்வது அல்லது, அதே சாதனை இன்று இல்லை என்று பரிதவிப்பது.

சமூகம் என்பதே ஒரு'அப்ஸ்ட்ராக்ஷன்'.நீயும் நானும் கொள்ளும் உலவு இல்லாவிட்டால் சமூகம் என்பது இல்லை. இந்த உறவு உன்னுடையதும் என்னுடையதுமான மனப்பாங்கைப் பொறுத்து குணம் கொள்கிறது. இங்கு நீயும் நானும் தான் முக்கியத்துவம் பெறுகிறோம். ஆனால் இன்றி ஆல் போல் உலகு முழுவதையும் பற்றியிருப்பது'அப்ஸ்ட்ராக்ஷன்'தான்.ஒற்றை மனிதன் சமூகம் என்கிற குணரூபத்திற்கு பலியாகிவிட்டான் அரசியல் நோக்கு கொள்கைகள் எல்லாம் இதே தளத்தில் உருப்பெற்றுவிட்டன. இதன் கபந்தா காரத்தில் கலைத்துறை எந்த மூலைக்கு?

நாம் இன்றைய 'மனித' அனுபவம் கலையுணர்வு பற்றி இன்றுவரை 'எழுத்து'வில் அனுதாபம் காட்டவில்லை. ஏனென்றால் அங்கங்கே பாஷை வரம்பு தேச வரம்புகளின் 'இதர' மனித சமூகங்களுக்கு அக்கறை காட்டப் படுகிறது. ஆகவே 'தமிழன்' கதி என்ன என்றே அங்கலாய்த்து வந்

திருக்கிறோம். இதன் காரணம் என்ன? விளைவு?

விழிப்பு உள்ளவராயிருந்தும் திறமை உள்ளவரின் கோளாறு அவர் தம்மை ஒரு இனத்துக்குரியவராகக் கண்டது எனவே கூட்டான ஒரு வளர்ச்சியையே வேண்டுகிறார். தேசவாரி, மொழிவாரியாக கண்ட ஒரு இனத்தையே வளர்க்க முயல்கிறார். இதனால் ஒற்றைமனிதன் கூட்டத்தின் பெயரால் அடைபட்டு தனி வளர்ச்சியை இழக்கிறான். தனியாளாக அவனது நிலைமை, பக்குவம், பற்றிய கவலை இழக்கப்படுகிறது. —இதை கவனியுங்கள்: கூட்டான 'தமிழினம்' பற்றி அதன் வரட்சி பற்றி பதறுகிறவர், தமக்கு அருகாமையிலிருக்கும் ஒரு பண்டித மனப்பான்மைக்காரரின் பத்தாம் பசலித் தனத்தை, ஒரு'குமுதம்'வாசகரை, பக்குவமின்மை என்ற தளத்தில் அனுமதித்துவிடுகிறார்—ஆனால் 'தமிழின'த்தின் வரட்சியை அனுமதிக்க முடியவில்லை. அதைக் கிண்டிக் கிளற முயன்று, எத்தனை தந்திரமான வரிகளை எழுதியும் (க. நா. சு. க்வெஸ்ட் கட்டுரையில் தமது 'திருக்குறள் இலக்கியமா' பற்றி குறிப்பிட்டது போல்) உள்ளூர மதிக்கிற நூலில், சில பத்தாம் பசலிகளைக் குத்திவிடுவதுக்காக குற்றம் சில கண்ட பாவனை செய்தும் கடைசியில் 'தலைவிதி'யைக் சிருஷ்டித்தும் தம்மையே கஷ்டப் படுத்திக் கொள்கிறார்.

விளைவு: அவரது சொந்த ரஸனையின் தொழிலில் கோளாறுதான்! ஒரு மனித ஜீவனாக ஆசாமி தன்னையே நிச்சலனப்படுத்திக் கொண்டதுதான். இந்த தற்கொலைக்காக அவருக்குச் சிலை வைக்கிற அனுதாபம் வேறு ஒரு ரஸிகருக்குத் தோன்றலாமேயன்றி லாபமேதுமில்லை.

இந்த வம்பு ஒரு ரூபமற்ற ரூபத்தால் 'அப்ஸ்ட்ராக்ஷன்' இனால் அல்லவா? ஒற்றை மனிதனை மறந்து 'தமிழுனத்'தின் ரஸனை வளர்ச்சியை தோளில் சுமந்ததால் அல்லவா? இந்த மனப்பான்மை கடைசியில் வந்து தேங்குவது தான்தோன்றியான அபிப்பிராயத்தில்தான். வெறும் அபிப்பிராயம் நபும்சகமானது. ரஸனையின் ஜீவனற்றது.

பரிதவிப்பு தன்னைத் 'தமிழன்' என்று பாகுபடுத்தி, தன்னை இன்னொரினத்துடன் இன்னொரு காலத்துடன் ஒப்பிட்டதில்தான் இங்கு ரஸனை நின்றுவிடுகிறது. 'தமிழன்' பின்னேபோய் மனித இதயம் திறபடும் போது தான் மீண்டும் புத்தகம் நமக்கு உறவு தருகிறது.

தமிழனாக ரஸிக்க முடியாது. சமூகஸ்மரணை தனிமனித இதயத் துடிப்பல்ல. ரஸனைக்கு மனித இதயம் துடித்தாக வேண்டும். மனித இதயம் தான் அனுதாபம், என்கிற, ரஸனைக்கு மூலச் சுரணையான ஒன்றை எழுப்புவது. 'தமிழன்' உணர்வு அல்ல. இதை ரஸிகர்கள் தங்களுக்குள் அவதானித்து அறியவேண்டும். ஒரு புத்தகத்தை அனுபவிக்கும் போதே டாஸ்டாவ்ஸ்கிக்கு 'தமிழனு, மனிதனு ஈடுகட்டுகிறுனென்று.

அப்போது நம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள்'—அவர்களது 'பக்குவமின்மை'-தென்படத்துவங்கும், அவர்களைச் சினக்க முடியதென அவர்களை நாம் 'மனிதர்களாக' அறிய வந்ததின் உறவு நிலையில் நம் சலனத்தை அடக்கி விடுவதுடன், அவர்களை மீறி நம் சினத்துக்கு இலக்காக ஒரு 'தமிழன் இல்லை என்கிற உண்மையும் ஸ்திரப்பட்டுவிடும். இதுதான் ஒரு ரஸிகனின் இயக்கத்தை அர்த்தமுள்ளதாக்கும். நபும்சகமாக உணர்ச்சியும்ஆத்திரமும் முதிர்ச்சியின்மையின் விளைவுகள்: படைப்பாளியும் ரஸிகனுக இயங்கும் மன நிலையில் தன்னை 'தமிழின' விக்ரகத்துக்கு அர்ச்சிப்பதில் வீணடிக்க நேராது மனிதர்களாக நாம் அறியவந்தவர்களின் பக்குவமே கண்கண்ட நிதர்சனம். அவர்களை மீறி நாம் ஒரு சமூகத்துடன் வம்புக்கு நின்று பலன் பெற முடியாது. சமூகத்தை அபிப்பிராயங்களால் அர்ச்சிப்பதோ 'சவுக்கடி கொடுப்பதோ தற்காலிகமான சலசலப்புக்கு மேல் ஆழமாக உழுது செல்லும் ரஸனையின் பலனைத் தராது. உண்மையைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும், நமது ஆசையைச் கழற்றிவிட்டு. இல்லாவிட்டால் ரஸனை இராது. பரபரப்பான அபிப்பிராயங்களே ஆட்சி புரியும்.

இந்த ரஸனை தரத்தக்க பலனும் ஆழமானதேயன்றி பரவலாக இராது. பரவலாக இயங்குவது ஒரு அபிப்ராயமே. அது தற்காலிகமாக ஒரு புத்தகத்தை விற்பதுக்கு உதவும்—அனுபவத்துக்கு அல்ல. ஆய்வு ரஸனையோ பக்குவமுள்ள ஆனால் தெளிவு பெருத இதயங்களை பரிபூர்ணப் படுத்தி விடுகிறது, இதனால் அதன் காரியத்துக்கு 'ஜே' கோஷம் இல்லாவிட்டாலும் வேர்ச் செறிவுண்டு, எங்கோ ஒரு இதயத்தியேனும். 'தமிழினத்தில் அல்ல ஏதோ ஒரு 'மனித' இதயத்தில்.

ரஸனை பக்குவமுள்ள இதயத்துக்குத்தான். உலகைத் திருத்தி விடாது. ஒரு 'சமூகம்' கலைஞன் ஒருவனை ஆதரிக்கிறதென்றால் பரவி விட்ட அபிப்பிராயத்திலேயே. பாரதியை அச்சிட்டுப் பிழைக்க முடிவது அதனால் தான் பாரதி ரஸனையால் அல்ல.

எனவே அபிப்பிராயம் போதும் என்பவர்கள் விற்பனை அடிப்படையில் பேசுகிறார்களா அநுபவப் பரிவர்த்தனை பற்றிப் பேசுகிறார்களா என்று தங்களையே கேட்டுக்கொள்ளவேண்டும். அப்போது 'பிரச்சார விமர்சனம்'என்கிற ஒன்றுக்கு. விற்பனை லாபத்தை குறியாக்கி சமூக உணர்வை ஒரு அரசியல்வாதக் குரலில் எழுப்பி சம்பாதித்துக்கொள்ள இன்றைய அலங்கோலமான வாழ்வில், மனிதனை சமூகத்தின் பெயருக்குப் பலியிடும் மனப்பான்மையில் அனுமதி கிடைக்கும்.

ரஸனைக்கு, தன்பாட்டுக்கு ரகஸிய முகாம்களில் இயங்கவேணும் விடுதலை கிட்டும்: அதுவேறு, அபிப்பிராய மயமான பிரச்சார விமர்சனம்'வேறு என்ற தெளிவில். அதோடு,

அபிப்பிராயங்கள் வெறும் வழிபாட்டுக்கே வகை செய்யும். வழிபடப்படும் காலங்களில் ஒரு கலைஞன் இறந்துபட்டவன், ஒவ்வொரு தலைமுறையும் ஒவ்வொரு தனி ஆளும் அவனைப் பற்றிய அபிப்பிராயத்தை உரிந்துவிட்டுப் பார்ப்பதில் தான் அவன் ரஸனைக்கு, புதிய பார்வைக்கு இலக்காகிறான். புத்துயிர் பெறுகிறான்.

கலைஞன் உயிரோடு இருக்கவேண்டுமானால் அவன் திரும்பத்திரும்ப ரஸிக்கப்பட வேண்டும், தனிமனித இதயத்தால். சமூகஉணர்வில்அவனைப் பற்றி உருவாகும் வெறும் அபிப்பிராயம் அவனுடைய கல்லறைதான். வரண்ட இதயங்களில் இந்தக் கல்லறைகளே என்றும் வழிபடப்படுகின்றன.

(124-ஆம் பக்கத் தொடர்ச்சி)

விளைவாக, முன்னவர்கள் வரலாற்று நவீனத்தில் செய்த அதேபோன்ற தவறையே தானும் செய்து தனது படைப்பில் வரலாறே இல்லாமல் போகும் நிலையை ஏற்படுத்திவிட்டார். இதனால் மணிபல்லவம் வெறும் ஒரு சமூகக் கதையை—ராகுல்ஜி தனது 'வால்காவிலிருந்து கங்கைவரை' என்ற நூலில் ஒவ்வொரு அத்தியாயத்திலும் சமூக வாழ்க்கை முறையின் ஒரு கட்டத்தை நவீனத்தைப்போல படைத்துக் காட்டியிருப்பதுபோல பூம்புகார் நகர் இருந்த காலத்து சமூகவாழ்க்கையின் ஒரு கட்டத்தை—படைத்தளித்துவிட்டு நம் முன் நிற்கிறார் பார்த்தசாரதி. இதைப் பார்க்கும் போது மானுக்கு வலைவிரித்து அதில் புலியைப் பிடித்துவிட்டார் நா.பா. என்றே எனக்குக் கூறத் தோன்றுகிறது. வரலாற்றில் மக்களுக்கும் பங்குண்டு என்ற உண்மையை விளக்கத்தக்க வகையில் வரலாற்று நவீனம் எழுதப்போவதாகச் சூளுரைத்தவர், தனது இந்த நோக்கத்தை விட்டு தன்னை யறியாமலே தடம் மாறிவிட்டார். இப்படியாக ஆக்சிடெண்டைப்போல் அகஸ்மாத்தாக, தமிழில் தனக்கிருக்கும் மொழி மற்றும் சமய அறிவின் துணைகொண்டு ஒரு முதல் முயற்சியைச் செய்து பூம்புகார் நகரையும், அன்றைய வாழ்க்கை முறையையும் நிரந்தரமான சித்திரமாக நம்முன் படைத்தளித்திருக்கிறார் பார்த்தசாரதி. தனது நோக்கத்தில் பெரிய ஏமாற்றத்தை அடைந்தபோதிலும் அகஸ்மாத்தாக இப்படியும் ஒரு சாதனையை ஏற்படுத்திய அவருக்கு தமிழ் மக்கள் நன்றிகூறவே வேண்டும்.

ராகுல்ஜியின் 'வால்காவிலிருந்து கங்கைவரை' என்ற நூலைப் படிக்க நேர்ந்தபோதெல்லாம், எனது நண்பர்களுக்கு அந்நூலைச் சிபார்சு செய்ய நேரிட்டபோதெல்லாம் தமிழகத்தின் வாழ்க்கை நிலைகளை இப்படி காலம் வாரியாக ஆய்ந்து ஆராய்ச்சிக் கண்ணுடன் படம்பிடித்துக் காட்ட ஒரு படைப்பாளி தமிழில் தோன்ற வில்லையே என்று நான் ஏங்கியதுண்டு. அந்தக் குறையை ஓரளவு நிறைவு செய்வதுபோல தமிழகத்தின் சமூக வாழ்க்கை நிலைகளில் ஒன்றை—ஒரு கட்டத்தை—நேருக்கு நேராகப் பார்க்கக் கிடைத்தது போல தனது மணிபல்லவத்தில் படைத்துத் தந்த நா.பா.வின் பணி வளரும் தமிழில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி என்றே கருதப்படவேண்டும். அவர் இதையே நோக்கமாகக் கொண்டு இதைச் சாதிக்கவில்லையே என்பது ஒருகுறை என்றாலும்அவரையும் ஏமாற்றிவிட்டு முதல் 'பூர்வீகத் தமிழ்ச் சமூக நாவலாக' அமைந்துவிட்ட மணிபல்லவத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இதே முயற்சியை அவர் திட்டமிட்டே தொடர்ந்து செய்தால் தமிழ் மொழிக்கு ஒரு நல்ல முன்னுதாரணமாக அவருடைய படைப்புக்கள் அமையும் என்பதில் எனக்குத் துளியும் சந்தேகமில்லை. இம்மாதிரி திட்டமிட்டு இம்முயற்சி செய்யப்பட்டால் மணிபல்லவத்தில்—வரலாற்று நவீனம் என்று தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டு—ஒரு செல்வந்தனையும், அவன் கையாளையும் அரசன் அமைச்சன் போன்ற போலிப்பாத்திரங்களாகக் காட்ட முயன்றிருப்பது போன்ற குறைபாடுகளையும்கூட நிச்சயமாக்க் களைந்துவிடமுடியும். அவருக்கு மக்களும் பங்குகொண்ட வரலாற்று நவீனம் படைக்கவேண்டும் என்ற ஆசை இன்னமும்கூட இருக்குமானால் அதற்காக அவர் தனிமுயற்சி ஒன்றை இனிமேல் தான் செய்துபார்க்கவேண்டும். அதிலாவது அரசனைவிட்டுவிடவேண்டும் அமைச்சனை விட்டுவிடவேண்டும் என்ற தேவையற்ற விரதங்களைக் கைவிட்டு விட்டு முயற்சிசெய்யப் பட்டால்தான் அவர் விரும்பிய பலனை எதிர்பார்க்கவும் முடியும். ஆனால், மணிபல்லவத்தை நான் பார்க்கும்பார்வையில் அவரும் பார்த்து, இதே முயற்சியை அவர் திட்டமிட்டு மேலும் செய்யவேண்டும்.

போன தடத்திலேயெ பொருத்திவிடப்பட்ட வண்டிபோல சுயசிந்தனை இருக்கவேண்டிய எழுத்தாளர் உலகம் செல்லும் போக்கிலிருந்து என்று தான் மாற்றம் ஏற்படுமோ தெரியவில்லை. பரிசோதனை முயற்சிகளில் திட்டமிட்டு முயன்று க.நா.சு.வைப்போல பல தோல்விகளைப் பெற்றுக்கொள்வதுகூட ஆயிரமடங்கு இந்தப் போக்கைவிட நல்லது என்றே கூறத்தோன்றுகிறது. ஆகையால் எப்போதாவது தமிழில் முதல் முயற்சியாகச் செய்யப்படும் மணிபல்லவம் போன்ற சுயபரிசோதனை முயற்சிகள் ஒரு அகஸ்மாத்தான நிகழ்ச்சியாக மட்டும் அமைந்து விடுவதில் நமக்கு பெருமை ஒன்றும் இல்லை. நமது திறனும், மொழியின் தேவையும் வாசகர்களின் நிலையையும் ஓரளவு கணக்கிலெடுத்துக்கொண்டு—குறைவை நிறைவு செய்து, நாவலுக்கு வங்கமும், சிறுகதைக்கு மலையாளமும் இன்றைய நவஇந்தியாவில் சிறப்புப் பெற்றிருப்பதுபோல தமிழையும் தனி ஒரு இலக்கியத் துறைக்கு நிலைக்களமாக்க வேண்டிய பொறுப்பு படைப்பாளிகளுக்கு உண்டு. அதற்கு வெறும் ஆசைமட்டும் இருந்தால் போதாது. உள்ளத்தில் ஒரு ஆவேசமே படைப்பாளிகளுக்குத் தோன்ற வேண்டும்.

---

# நிலவு

நல்ல பெண்ணடி நீ!
முகத்திரை இழுத்துவிட
இரண்டு வாரம்
அதை எடுத்து விட
இரண்டு வாரம்
இதை விட்டால் வேறு
வேலையே இல்லையா உனக்கு?

—சி. மணி

# ஒரு பெரிய வாய்ப்பு

அன்புள்ள வாசகர்களே,

சென்ற ஏட்டில் வெளியான எழுத்து பிரசுரம் வெளியிட்டுள்ள 9 புத்தகங்கள் விளம்பரத்தை கவனித்திருப்பீர்கள். மறுபடியும் உங்கள் கவனத்துக்கு அவைகளை கொண்டு வருகிறோம்.

வ. ரா., ந. பிச்சமூர்த்தி, கு. ப. ரா., சிட்டி, வல்லிக்கண்ணன், சி. சு. செல்லப்பா ஆகியோரின் புத்தகங்களை ஒன்று சேர்த்து ஒரே சமயத்தில் பார்க்கிற வாய்ப்பு இப்போதுதான் தமிழ் புத்தக உலகத்தில் முதல் முறையாக கிடைக்கிறது என்று ஒரு இலக்கிய அன்பர் குறிப்பிட்டார்.

உள்ளடக்கம், உருவம் இரண்டும் இழைய இவ்வளவு சிறப்பாக புத்தகங்கள் வெளியானது ஒரு பெரிய சாதனை என்று மற்றொருவர் குறிப்பிட்டார்.

ஏதோ மாடர்ண் லைப்ரரி (பிரபல இங்கிலிஷ் பிரசுரக் கம்பெனி) மாதிரி இருக்கிறதே என்றார் இன்னொருவர்.

மேல் நாட்டு பதிப்புடன் போட்டி போடுகிறதே என்றார் வேறொருவர்.

இதெல்லாம் புத்தகம் வாங்கியவர்களிடமிருந்து வந்த வார்த்தைகள்.

ஆகவே எழுத்து வாசகர்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு செட் இந்த 9 புத்தகங்களையும் வாங்கி இலக்கியத்தரமான உங்கள் புத்தகங்களின் வரிசையில் சேர்த்துக் கொள்ளவும். உங்கள் கைகளுக்கு திரும்பத் திரும்ப வர வேண்டிய நூல்கள் இவை.

## நல்ல சலுகை

பின் வரும் 9 புத்தகங்களும் ரூ 31.00 பெறுமான முள்ளவை, ஆனால்—

### நீங்கள் ரூ. 25 மட்டும் அனுப்பிவைக்கவும்

தபால் செலவு எங்களது.

வி, பி பி, மணியாடர் மூலம் பெறலாம்: வெளியூர் செக்குகள் மாற்று கமிஷன் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சொர்க்கத்தில் சம்பாஷணை | (வ ரா) | ரூ. 3.00 |
| 2. | வசந்தகாலம் | ,, | ரூ. 3.00 |
| 3. | பதினெட்டாம் பெருக்கு | (ந. பிச்சமூர்த்தி) | ரூ. 4.00 |
| 4. | வழித்துணை | ,, | ரூ. 2.00 |
| 5. | அகல்யை | கு. ப. ரா. | ரூ. 4.00 |
| 6. | ஆண் சிங்கம் | (வல்லிக்கண்ணன்) | ரூ. 4.00 |
| 7. | சில விஷயங்கள் | (சிட்டி) | ரூ. 3.00 |
| 8. | சத்யாக்ரகி | (சி. சு செல்லப்பா) | ரூ. 4.00 |
| 9. | மணல் வீடு | | ரூ. 4.00 |

### நீங்கள் அனுப்பவேண்டியது ரூ. 25 தான்

★

**எழுத்து பிரசுரம்**
19-A, பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை-5.

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Cenrtal Press, 97, Big Street, Triplicane Madras-5.